OFFICE OF THE REGISTRAR OF BOOKS
No.
5 - AUG 1927
MADRAS

உ

ஓம்

# ஜகன்மோகினி

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி! மனத்தைச் சார்ந்து

| மலர் IV | பிரபவஸு ஆடிமீ<br>July 1927 | இதழ் 8 |
|---|---|---|

## திருமால் இரட்டை மணிமாலை

(5-வது சஞ்சிகையின் தொடர்ச்சி)

பரவிப் பணிந்தேத்தும் பண்புடைய தொண்டர்
விரவு நலமடைய வேண்டிக்—காவுடைய
பவ்வப் பெரும்பிறவி பாழ்படவென் சிந்தையினில்
எவ்வுருவங் கொள்வே ணியைந்து.

இயைந்த மனத்தா லெருவைக் கரசுக் கிரும்பதவி
வியந்து பயந்த நம்வேத முதல்வன் விரிஞ்சனைமுன்
நயந்து தனுந்தி நளினத்துத் தந்தருள் நாரணன்றாள்
உயர்ந்த கரத்துத் தலைமிசைக் கொள்பவ ருத்தமரே.

உத்தமனே சிந்தைக் கொளியே யுனதடியைப்
பத்திமையா லேத்திப் பணிவேனைச்—சித்தம்
உருகும் வகையருளி யொண்பதத்தை மேவ
அருளுவையோ யாழியா யன்று.

அன்றிய வாண னரும்புயமா யிரமாழி யினால்
கொன்று குவித்த குறைவிலி யுன்றன் குரைகழலைத்
தின்று முடிமிசைச் சூட்டுவை யாயின் றயரொழிந்தே
என்று மழியா விரும்பத மெய்துவன் எம்பிரானே!

எம்பிரான் எம்மான் இறைஞ்சு மடியார்க்குத்
தம்பிரான் கஞ்சத் தடங்கண்ணன்—செம்பொருளாய்
நின்றான் நெடுமறைக்கும் நேரா நிலைமையினான்
தன்றாளை நெஞ்சே தரி.

தரித்த பெரும்புயத் தானவன் வேள்வியின் மாணுருவாய்
விரித்த கரத்தொடு மேதினி வேண்டியவ் வெய்யவனைச்
சிரித்து நலந்தரு சேவடிகொண்டு செருக் கடக்கும்
பரித்த பெரும்புகழ்ப் பார்மகள் கேள்வனைப் பாடுவனே.

பாடுஞ் சுரும்புறையும் பைங்கூந்தற் பின்னைக்கா
ஈடி லெருதே ழிறவடர்த்தாய்—சூடும்
திருத்துளவத் தார்தந்தென் சேயிழையா ளுய்யக்
கருத்திலையோ ஐயா கழறு.

கழறு மிளையோன் கருத்தினைக் காணுக்கயற் கண்ணினுள்
குழறு மழலைக் குளிர்மொழி கொண்டு கொடுங்கலையை
அழலு நெடுஞ்சிலை யம்பா லழித்தரு ளண்ணலடி
நிழல் அன்றிவேறு நிகழ்கதி யுண்டோவிந் நீணிலத்தே.

நீணிலத்தை முன்னம் நெடுங்கோட்டின் ஏனமதாய்
ஏ ணுலவ வைத்தருளு மேந்தலே—பாணுலவு
மென்மொழி யாலன்பர் வியந்தேத்த நீயுகந்தாய்
புன்மொழியுங் கொள்வாய் புரிந்து.

புரிந்த பெருவேள்வி சென்று பொருபடை மாவலிபால்
விரிந்த செடும்புகழ் வேதியர் மாணுரு வேய்ந்தவனைப்
பரிந்த மனத்துடன் பாரினில் மூவடி பாங்குறநீ
தெரிந்து கொடுத்தரு ளென்றவன் றாட்டுணை சேவிப்பனே !

சேவிக்குந் தொண்டர் திருவடியென் சென்னிமிசை
மேவிக் கிடந்தக்கால் மேவேனோ—தாவில்
மறைமுடிவுக் கெட்டாத வான்பொருளா மாயன்
குறைவறுமா னந்தநிலை கூறு.

கூறுங் கிளிமொழிக் கோதைமுன் சூடிய கோதையினைத்
தேறுங் குழலுக் கணிந்தருள் தேவன் செழுஞ்சடையான்
வீறு மனத்துறை வேதமுதல்வன் விரைமலர்த் தாள்
நாறு முடியின ரன்றோ நலம்பெறு நாவலரே.

நாவலரி னூறு நறுந்தேன் வறியேற்கு
மேவலருங் கற்பக மென்போதாகும்—கோவல்
இடைகழியிற் சேர்ந்த இருங்கவிஞ ரேத்தும்
புடைகழியாப் புட்கொடியான் றாள்.

தாளை விரும்பிய தானவன் மாமுடி சாரவுமுன்
வாளை விரும்பிய கண்ணியை வௌவிய வாளரக்கன்
மாள விரும்பிய மாயவன் மாணடி வாழ்த்துபவர்
கோளை விரும்பு கொடிய நமன்றனைக் கொல்பவரே.

கொல்லும் வரிசிலைக்கைக் கோமகனும் பார்த்தனுக்கு
வெல்ல வமரில் வியன்தேரில்—புல்லும்
பொருபடையை நீக்கிப் புரவியை முன் ஊர்ந்த
கருமுகிலை நன்மனமே காண்.

ஸ்ரீ வீரராகவ கவி

# தமிழ் நாட்டு நவ மணிகள்.

### ஸ்ரீ பராங்குசர்—நீலம்.

ஞானமளி ஆரணங்கள் நான்கினையும் நற்றமிழால்
தேனொழுக நமக்களித்து சென்மத்தைப் பயன்படுத்தித்
தான்பிறக்கும் பொழுதுசட வாயுவையுங் காரத்தால்
தானசிக்கச் செய்தவஸ்ரீ சடகோபர் நீலமணி.

### ஸ்ரீ ।திராஜர்—பச்சை.

சீர்மருவுங் கமலத் திருமகள்தம் கணவன் திருவருளாலுயரும் தேசிகரிற் நலவண் பார்பரவுங் கருணைப் பழுதற மகிழ்மாறன் பரிவுடனருளிய நற்பனுவல் களாயிரமும், கார் நிகர் தனது பெருங்கருணையினுலுலகிற் கட்டுரை செய்தருளிக் கலியதனைக் கடிவார், ஏர்மருவும் பொழில் சூழினிய பெரும்பூதூர் எதிவரர் தாமொருவர் எழில் மிகுபச்சைசமணி.

### ஸ்ரீ பிள்ளை லோகாசாரியார்—மாணிக்கம்.

அழகுடை முடும்பை தன்னில் அவதரித்துஜ் ஜீவிக்க
அழகுடை வசனபூஷ ணதிக்ரந் தங்கள் செய்தே
அழகுடன் மிகுவேதாந்த ஆர்யதேசிகர் தாம்போற்ற
அழகுடன் வீற்றிருக்கும் லோகதேசிகர் மாணிக்கம்

### ஸ்ரீ வேதாந்த தேசிகர்—கோமேதகம்.

தூப்பில் எனும் ஊர்தனில் நம்தொல்லைகளைப் போக்கிட வென் றவதரித்து
மாப்புகழோ டொண்கவிகள் வன்மையுடனருளி நமையுய்யக் கொண்டு
காப்புகரில் ஸர்வதந்த்ரஸ் வதந்திரரென் றிது முதலாவிருதும் பெற்று
மாப்புகழ்வேங் கட நாத தேசிகரே வளமிகுகோ மேத கம்மே.

### ஸ்ரீ மந் மணவாளமாமுனிகள்—பவளம்.

சீருடைக்குந்தி தன்னில் சிறந்த சேஷாம்சமாகச்
சீருடனவ தரித்துச் சேதனருஜ் ஜீவிக்கச்
சீர்திகழ் ரத்தினமாலை சீர்திகழ் நூற்றந்தாதி
சீருடன் செப்பும் காந்த வரமுனி பவளமாகும்

### ஸ்ரீ இராமாநுஜம் பிள்ளை—புட்பராகம்

சீர்திகழ் முடும்பை தன்னில் திருவவதாரம் செய்தே
ஆர்மகிழ் மாலை மார்பன் ஆணையால் முடும்பை விட்டுச்
சீர்மிகு பொழில்கள் சூழும் திருக்குரு கூரில் வந்த
பார்புகழ் சீரிராமா னுஜம்பிள்ளை புஷ்பராகம்.

### ஸ்ரீமத் ஆத்தான் ஸ்வாமி—வச்சிரம்.

வண்குருகை மாநகரந்தனில் வத்ஸ வம்சத்தில் வந்துதித்தான் றி
மண்ணுலகத்துள்ளோர்க்கு வாழ்வளித்து மகிழ்மாறன் கோயில்தன்னை
வண்ணமுடன் சீர்படுத்தி வைணவர்தம் கோஷ்டிகளும் ஏற்படுத்தி
வண்ணமுடன் வைணவர்க்கு வாழ்வளித்த வரதார்யர் வைரமாகும்.

ஞானதிருஷ்டி அழகப்ப ஐயங்கார்—வைடூரியம்.

மானமரு மென்னேக்கி மலர்க்கோதை செய்த திருப்பாவை தன்னைத் தானுருவனேத அவன் தப்பிதத்தைக் கண்டு ஐந்து வயது தன்னில் ஞானமுடைக் கண்களினல் தான்திருத்தி ஞானிலத்தில் கீர்த்திபெற்ற வானவாசேர் திருக்குருகை வாத்ஸ்ய சுந்தராசார்யர் வைடூரியம்மே.

ஸ்ரீ சடகோபாசாரியார் ஸ்வாமி—முத்து

திருக்குருகை மாநகரில் வந்துதோன்றிச் சேதனரை உயக்கொண்டுபூமிதன்னில் மருக்கமழும் குழல்கோதை ஆதிநாதர் மாறனெடு கண்ணபிரானருளும்பெற்றுப் பெருக்கமுடன் ஸ்ரீவரதர் லோகாசார்யர் பேரருளும் பெற்று மிகக்கருணையோடு திருப்பொலிந்த ஸ்ரீமுடும்பைச் சடகோபார்யர் சீருடனே நல்முத்த மாகுங் காணே.

பலச்ருதி

தமிழ்நாட்டு நவமணிகள் தன்னை நாமும் தானய்ந்து திருவல்லிக்கேணி நின்றும் தமிழ்நாட்டில் வெளியாகிச் சிறப்புற்றேங்கும் தமிழினிய நடைவாய்ந்த மோகினிக்கண், தமிழ்நாட்டுச் சேதனர்கள் உய்யும் வண்ணம் தாளிட்ட சிறப்புளவிப் பதிகம் தன்னை, தமிழ் நாட்டில் படிப்பவர்கள் கேட்போர் சொல்வோர் தாமிருந்து கீர்த்தியுடன் வாழ்வர்தாமே.

20—7—27.
ஆழ்வார்திருநகரி } அ. தே. ராமாநுஜ ஐயங்கார்.

குறிப்பு:—பூர்வ ஆசாரியர்கள் அவர்களது வம்சத்தவர்கள் ஆகிய இவர்களின் வைபவத்தைச் குறிக்கும் இந்தத் தமிழ் நாட்டு நவமணிகள் என்னும் பதிகம் பலரும் கண்டு களிப்புறுமாறு நமது சஞ்சிகையில் விளங்கும்படி, ஸ்ரீ உ. வே. எழுந்தருளியிருக்கும் அ. தே. ராமாநுஜ ஐயங்கார் சுவாமி அனுப்பினமைக்கு வந்தனம் அளிக்கிறேம்.

பத்திராதிபர்

---

## "5 ரூபாய்கள் இனும்"

(ஜகன்மோகினி பரிசு. நெ. 3)

கஸ்தூரிக் கனி சிறிது கொண்டுவந்தேன்
கற்புடைய கர்னகைக்குப் பாதி ஈந்தேன்
மறவாமல் மாதகைக்கு நாலில் ஒன்றும்
மங்கையராம் சீதைக்கு எட்டில் ஒன்றும்
பங்கமின்றி பத்மினிக்கு ஒன்பதில் ஒன்றும்
பகிர்ந்துடனே ஈந்துவிட்டேன் கடைசியாக
கஸ்தூரிக் கனிபத்து மீதிகண்டேன்
கணக்கறிந்தோர் தயவு செய்து பகருவீரே?

விடுவிடுப்புத்திரட்டு விதிகள்.

விடுகதைகளுக்கு விடை யெழுதவோர் தெளிவாக இங்கியில் எழுதியனுப்ப வேண்டும். ஒவ்வோர் விடைகாகிதத்தின் கீழ் எழுதியவரின் கையொப்பமிட்

டிருந்தாலன்றிப் போட்டியில் சேர்க்கமுடியாது. குறிப்பிட்ட தேதியில் விடு விடுப்பைப் பரிசோதிக்கும் பொழுது முதலில் பார்க்கப்படுகிற சரியான விடு விடுப்பை எழுதியவருக்கு ஐந்து ரூபாய்கள் பரிசுகொடுக்கப்படும். மற்றும் இது சம்பந்தமாய் யாதொரு கடிதப் போக்குவரத்தும் வைத்துக் கொள்ளமுடியாது. விடுகதை பரிசோதகரின் தீர்ப்பே முடிவானதும் சட்டப்படி செல்லக் கூடியதுமாகும்.

விடை காகிதமும் அதனுடன் "ஒரு அணா" போஸ்டல் ஸ்டாம்பும் அடக்கம் செய்து 20. 8. 1927க்குள் சேரும்படி, டாக்டர், கே. எஸ். பீ· மணியம் அவர்கள் (விடுகவி டிபார்ட் மெண்ட்) நாகை, கீர்தனமங்கலம் போஸ்டு, சீக்கல், எஸ். ஐ. ஆர், என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும்.

சரியான விடு விடுப்பும், பரிசு பெற்றவரின் பெயரும், இச்சஞ்சிகையின் வாயிலாகவே அறிவிக்கப்படும்,

பரிசோதனை நாள் 20, 8. 1927., காலை பத்து மணி.

பரிசளிப்பவர்:—டாக்டர் ஸ்ரீமான், கே, எஸ், பீ மணியம் அவர்கள்
டைரெக்டர் ஆப் சௌத் இன்டியன் மாரல் யூனியன்
சொஸைடி'ஸ்.. முகாம்:—நாகை.

பரிசோதகர்:—மிஸ். ஆனந்தா—தமயந்திபாய்,

---

## 5 ரூபாய்கள் இனாம்.

காட்டி விற்கும் குண்டுண்டு கோயிலல்ல
கனியுண்டு வெட்டுண்டு வங்கமல்ல
வாட்டி யிட்ட சுருளுண்டு ஓலையல்ல
வழுத்து களிமண் ணுண்டு பூமியல்ல
பாட்டிசைக்கும் சபைக்குவரும் பரத்தையல்ல
பலரிடமு முன்னிருந்து பகரச் செய்யும்
நாட்டி லுனக்கீடில்லா நயனமானே!
நாயகமே! இக்சதையை விடுவிப்பாயே.

விடுகதைக்கு விடை எழுதுவோர் தெளிவாக இங்கியில் எழுதி அனுப்ப வேண்டும். ஒவ்வொரு விடை காகிதத்தின் கீழ் எழுதியவரின் கையொப்பமிட்டிருந்தாலன்றிப் போட்டியில் சேர்க்கமுடியாது. குறிப்பிட்ட தேதியில் விடுவிடுப்பைப் பரிசோதிக்கும் பொழுது முதலில் பார்க்கப்படுகிற சரியான விடுவிடுப்பை எழுதிய வருக்கு ரூ. 5. (ஐந்து) பரிசு கொடுக்கப்படும். மற்றும் இது சம்மந்தமாய் ஏதாவது விஷயம் தெரிய வேண்டியிருந்தால் ரிப்ளை கார்டு எழுதினால் பதில் எழுதப்படும். விடை காகிதமும் அதனுடன் ஒரு அணா போஸ்டேஜ் ஸ்டாம்பும் 21-8-27 குள் சேரும்படியாக கீழ்க்கண்ட விலாசதாருக்கு அனுப்பப்படவேண்டும். சரியான விடிவிடுப்பும், பரிசு பெற்றவரின் பெயரும் இச்சஞ்சிகையின் வாயிலாகவே அறிவிக்கப்படும்.

பரிசோதனை நாள் 21-8-27.

பரிசோதகர்:— C. சிங்காரவேலு செட்டியார்.

பரிசளிப்பவர்:— P. V. S. மூர்த்தி. கருணாநிதி லைப்ரரி
நாகப்பட்டணம்.

# பல குறிப்புகள்

## மனிதன் வயிற்றில் பசுங்கன்று

### பர்மாவில் ஒரு ஆச்சரியம்.

---

மையங்கியின் ஜில்லாவில் கியாகர் என்ற கிராமத்தில் மக்லவின் என்ற மனிதருக்குக் கடுமையான வயிற்று வலி ஏற்பட்டது. நீண்டகாலமாக வலியிருந்ததால் அவர் ஒரு ஸர்ஜனிடம் ஆபரேஷன் செய்துகொள்ளச் சென்றார். ஸர்ஜன் அவரைச்சோதித்ததில் விலா எலும்புகளுக்கிடையில் ஒரு சதைக் கட்டியிருப்பதைக் கண்டார். அது சில சமயங்களில மேலும் கீழும் ஓடிற்று. ஸர்ஜன் நன்றாகக் கவனித்து ஆபரேஷன் செய்ததில், தலை, வெள்ளையான கொம்புகள் கொஞ்சம் மயிர் முதலியவற்றுடன் கூடிய ஒரு பசுங்கன்றைக் கண்டு ஆச்சரியமடைந்தார். அது ஒரு கண்ணாடிப் புட்டியில் வைக்கப்பட்டிருக்கிறது. அம்மனிதர் உயிருடன் சிகிச்சை பெற்று வருகிறார்.

## டாக்டர் தாகூரின் செய்தி.

சிங்கப்பூருக்குப் போகுமுன் டாக்டர் தாகூர் பின்வரும் செய்தியை வெளியிட்டார்;—"தற்காலம் நமது நடவடிக்கைகளெல்லாம் பெரும்பாகம் உயிரற்று சிதறிப்போயிருப்பதினால் பெரும் துக்கம் எனக்கேற்பட்டு அத்துடனேயே இப்பொழுது இண்டோ ஏஷியா, இண்டோ சீனா முதலிய தேசங்களுக்குப்பிரயாணமாகிறேன். இந்நாட்டில் வசித்த நம் முன்னோர்களின் ஆத்ம ஞானம் ஒருகாலத்தில் இந்த தேசங்களிலெல்லாம் பரவிற்று. இந்தியா எல்லோருக்கும் ஆத்ம விவேகத்தை யளித்து எல்லா ஜீவன்களிடத்தும் சமமாக அன்பு பாராட்டியபடியால் இந்நாடு பெரும் புகழ் பெற்றது. பூகோளப்படி நாடு அமைக்கப்பட்டிருப்பதைப் புறக்கணித்து விஸ்தாரமான தோரணையில் நமது சரித்திர ரீதியை அறியவும், சில்லரை விஷயங்களிலிருந்து நமது மனதைத் திருப்பி ஸத்தியத்திலும் நீதியிலும் அதிக நம்பிக்கைகொண்டு எல்லா ஜீவராசிகளையும் ஒன்றென நினைக்கும் மனோபாவ மேற்பட வேண்டுமென்பதே இப்பிரயாணத்தின் நோக்கமாகும்."

## மகாத்மாவிடம் பிள்ளைவரம்

### ஒரு ஸ்திரீக்கு மகாத்மாஜியின் பதில்.

மகாத்மாஜியை பெங்களூரில் ஒரு ஸ்திரீ தனக்கு ஒரு குழந்தை பிறக்க வேண்டுமென்று தாங்கள் ஆசிர்வதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டதற்கு, அவர் "தேசத்தில் உள்ள கணக்கற்ற குழந்தைகளில் ஒன்றையோ அல்லது தமக்குவேண்டிய மட்டிலுமோ பொறுக்கிக்கொண்டு உணவில்லாத குழந்தைகளுக்கு உணவையும், உடையில்லாதவர்றிற்கு உடைகளையும், இரண்டும் வேண்டுபவற்றிற்கு இரண்டையும் அளிக்கட்டும். அப்போது மைசூரில் யாரும் அவளை விடச்சந்தோஷ மடைந்ததாய் இருக்க முடியாது" என்று கூறினார்.

# அறிவிப்பு

கடந்த 7வது சஞ்சிகையில் வெளியான (ஜகன்மோகினிபரிசு, நெ 2,) விடுகவியின் சரியான பொருள் = மண்பாண்டம்.

பரிசு பெற்றவர்:—

டி. ஞானப்பிரகாசம், எஸ், எஸ், எல், ஸி.
ஸலேஷ்யன் போர்டிங்.
பூக்காரத் தெருவு—தஞ்சாவூர்.

## முக்கிய குறிப்பு,

விடைக்கடிதம் அனுப்பும்பொழுது நேயர்கள் அவசியம் இப்பத்திரிகையின் சந்தா நெம்பரைக் குறிப்பிடல்வேண்டும்.

பரிசோதகர்.

---

வெளிவந்து விட்டது! வெளிவந்து விட்டது!!

## சௌந்தரகோகிலம் 3-ம் பாகம்

புதுமை புதுமையான திடுக்கிடும் சம்பவங்களே நிறைந்து கதை ஆநந்தமாக முடிவடைகிறது. இதன் விலை ரூ. 2-4-0. முதல் பாகத்தின் விலை ரூ. 1-8-0. இரண்டாம் பாகத்தின் விலை ரூ. 2-4-0. மூன்றையும் சேர்த்து ஒரே தடவையில் வாங்கினால் தபால் செலவு சேர்க்கிறதில்லை. ரூ. 6 அனுப்பினால் போதும்.

ஸ்ரீமான் வடூவூர் கே. துரைசாமி அய்யங்கார் அவர்கள் எழுதிய

## இதர நாவல்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாயாவிநோதப் பரதேசி 1, 2 | 5 | 0 | கனகாம்புஜம் 1, 2 | 2 | 12 |
| பூர்ண சந்திரோதயம் 1,2,3,4 | 7 | 8 | மாயாசுந்தரி | 0 | 12 |
| மதன கல்யாணி 1, 2, 3, | 4 | 8 | வஸந்தமல்லிகா | 1 | 8 |
| கும்பகோணம் வக்கீல் 1, 2 | 3 | 0 | வித்யாஸாகரம் | 1 | 4 |
| மேனகா 1, 2 | 3 | 0 | திலோத்தமா | 0 | 12 |
| விலாசவதி 1, 2 | 3 | 0 | மாணிக்கவாசகர் | 0 | 8 |
| பாலாமணி | 2 | 8 | வஸந்தகோகிலம் | 1 | 0 |
| காளிங்கராயன்கோட்டை 1,2 | 4 | 0 | திவான் லொடபடசிங் பகதூர் | 0 | 12 |

வத்ஸா கம்பெனி, திருவல்லிக்கேணி, மதாராஸ்.

---

## "கோபாலாரிஷ்டா"

இம்மருந்து சாஸ்திரோக்தமாய் செய்து முடித்திருக்கிறது. இது ஸ்திரீகளின் கர்ப்பாசய சம்பந்தமான சூதக சூசிக வாயு, உதரக்கட்டு முதலிய எல்லா வியாதிகளிலும் விசேஷ குணத்தைத் தரக்கக்கூடியது. இம்மருந்தை ஒரு முறை பரிக்ஷித்துப்பார்த்தால் மறுபடி வாங்காதிருக்கமாட்டீர்கள். மருந்து ஸ்டாக்கும் மிகவும் கொஞ்சமாக விருக்கிறது. தேவையுள்ளவர்கள் முந்துங்கள்.

10-அவுன்ஸ் கொண்ட புட்டி 1-க்கு விலை ரூ. 2 12 0

R. கிருஷ்ண ஸ்வாமி சர்மா, ஆயுர்வேத வைத்ய சாஸ்திரி,
2/63, துளசிங்கப்பெருமாள் கோவில் தெருவு, திருவல்லிக்கேணி, சென்னை.

## இனாம்! ரோஜாலி இனாம்!!

அற்புதமான நாவல். படிக்கப்படிக்க இனிக்கும். 200 பக்கங்கள் கொண்டது. விலை அணா 12 தான். புஸ்தக ஆர்டருக்கு அல்லது 2 அணா ஸ்டாம்புக்கு போலீஸ்கிலி போதிராயர், ராவ்பகதூர் ரஸதுல்லா சாஹிப் என்ற 2 நாவல்கள் இனாம்.

வ. கிருஷ்ண ஸ்வாமி சர்மா,
சின்னப்ப முதலி தெரு, மஞ்சகுப்பம் Cuddalore, N. T.

---

## மதிமுகி.

இனிமையான துப்பறியும் நாவல். அநேக நாவல்கள் எழுதிய N. C. தண்டபாணி பிள்ளை இயற்றியது. விலை அணா 8.

### பாணபுரத்து வீரன்.

வெ. சுவாமிநாத சர்மா இயற்றிய தேசபக்தி நிறைந்த ஓர் நாடகம். விலை ரூ. 1.

இன்னும் எங்களிடம் ஸ்கூல் புத்தகங்களும், தமிழ்நாவல்களும், ஸ்டேஷனரி சாமான்களும் கிடைக்கும். வியாபாரிகளுக்கு தக்க கமிஷன் கொடுக்கப்படும்.

தீனதயாளு அண்டு கம்பேனி,
176 தங்கசாலை தெரு, சென்னை.

---

"ஜகன்மோகினி" சந்தாதாரருக்கு ஓர் அறிவிப்பு

வெளிவந்து விட்டது! புதியநாவல்!! வெளிவந்து விட்டது!!!
நாவலிற் சிறந்த நவீன நாவல்! சித்திரப்படம் சேர்ந்த சிறந்த நாவல்!!
புத்தி போதிக்கும் புதிய நாவல்!!!

## அமிர்தமாலினி.

(அழகிய ஆப்டோன் படத்துடன் கூடியது)

நவீனமாக வெளிவந்திருக்கும் இந்த "அமிர்தமாலினி" மிக்க மிக்க இனித்திடும் நாவலாகும். அதியற்புதமான ஆனந்த கற்பிதம், பாச்சுவை பரவிய நடையுடையது. அமிர்மாலினியின் குளிர்ந்த குணங்களையும், சுவர்ணம்பாளின் கடூர குணங்களையும், படிக்கப்படிக்க ஆனந்தமளிக்கும். பேயின் வாயகப்பட்ட சேயிழையாள்" என்னும் அத்தியாய மொன்றே இதன் சிறப்பை வெளிப்படுத்தும். கொஞ்சம் காப்பிகளே அச்சிட்டிருப்பதால் ஆர்டருக்கு முந்துங்கள். இதன் விலை அணா 4.

குறிப்பு:—ஜகன்மோகினி சஞ்சிகையில் 4-வது மலர் 4-வது இதழில் மேல் கண்ட நாவல் வெளிவந்திருக்கிறபடியால்மேற்படி நாவலின் முடிவைத் தெரிந்துகொள்ள, இந்தியா 4 அணா ஸ்டாம்பு அனுப்பினால் தபாற் செலவு இல்லாமல் அமிர்தமாலினி என்னும் நாவல் அனுப்பப்படும்.

விலாசம்:—வத்ஸா கம்பேனி,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

இதைக் கேட்ட நாயுடுவும் வியந்து வருத்தப்பட்டுக் குமாஸ்தாவைப் பார்த்து "இதென்ன ஆச்சரியமாக இருக்கின்றதே! இதை யாரோ வேண்டுமென்றே கூஷாத்திரத்தினால்தான் செய்திருப்பதாக நீர் சொல்லியதிலிருந்து நன்றாகப் புலப்படுகின்றது. அதாவது, நேற்று மாலை கடற்கரையில் காந்தாமணி செல்லப்பாவை அவமதித்து, அலக்ஷியமாகப் பேசாமல் வந்துவிட்டதாகத் தன் தந்தையிடம் கூறியதாய் அந்த முதலியார் சொல்லியதைப் போலீஸார் உம்மிடம் தெரிவித்திருக்கிறார்கள். அதை வைத்துக்கொண்டே நாம் மேலே நடந்த விஷயங்களை ஓட்டிப் பார்ப்போம். பீச்சில் அலட்சியம் செய்த மனிதனை இரவு வெகு பிரியமாக வரவேற்றுக் கைகுலுக்கி அவள் அழைத்திருப்பாளா? அப்படி மாறுவேடத்தினால் அடையாளம் தெரியாமல் அவ்வாறுசெய்தாள் என்று கூறினாலும் முதலில் தெரியாமலிருக்கலாம். பிறகு அவன் அவள் பக்கத்தில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தான் என்றும் கூறுகிறார்கள். தினம் பழகும் மனிதனை அவ்வளவு அருகில் உட்கார்ந்து பேசும்போது குரலிலாவது, ஜாடையிலாவது, பேசும் மாதிரியிலாவது தெரிந்து கொள்ளாமலிருக்க முடியுமா? அவ்வாறு கூறுவது ஒவ்வுமா? திடீரென்று ஒரு நாள் பார்த்த மனிதனை மீண்டும் இவ்வாறு மாறுவேடத்தில் பார்த்தால் அது தெரியாமலிருப்பது சகஜம். வெகு நாளாகப் பாராமலிருக்கும் மனிதனைத் திடீரென்று பார்த்தால் தெரியாமலிருப்பது சகஜம். தினம்பழகும் மனிதனைப்பற்றி அவ்வாறு கூறுவது பொருந்தாது. மேலும் செல்லப்பா கொலைசெய்த பிரேதத்தை எடுத்துக் கொண்டு போகும்போது தன்னைப் பிறர் அறியும்படியாகத் தெரிவித்துக் கூறிச் செல்வானா? அவ்வாறு எந்த மடையனாவது செய்வானா? செய்திருக்கும் காரியமோ மகா விபரீதமானதாக விருக்கிறது. அதைச் செய்தவன் தன்னைப் பிறர் சந்தேகிக்காவாறு மறைத்துக்கொள்ள முயற்சிப்பானா, அல்லது விளம்பரப் படுத்திக் கொள்வானா? இது நம்பத்தக்கதாக இருக்கின்றதா? இதை நோக்கும்போதே இதில் ஏதோ மாறுபாடு இருக்கவேண்டும் என்று பகிரங்கமாகத் தெரியவில்லையா? மீண்டும், கொலைசெய்த பிரேதத்தைக் கூடக் கண்ணில் காட்டமாட்டேனென்று அவனே சொல்லிவிட்டுச் செல்வானா? இது ஏதோ வஞ்சகக் கருத்தோடும், உள்

ளாழ்ந்த யோசனையோடும் சொல்லிச் சென்றதாகத் தோற்றுகின் றதேயன்றி நம்பத்தக்கதாக இல்லை. பின்னும் ஏதோ கடிதமெழுதி அங்கு போட்டிருந்ததாகக் கூறுகின்றீரே. அதை நான் நேரில் பார்த்தால், அதனைக்கொண்டே இந்தக் கொலையின் உண்மை யைத் தெரிந்துகொள்வேன். ஆகையால் நாம் போலீஸாரிடம் சென்று அக்கடிதத்தைப் பார்க்கவேண்டும். அவர்களுக்கு என் னைக் காணும்போதே எரிச்சலுண்டாகப் போகின்றது. அவர்கள் ஒரே தீர்மான்மாகச் செல்லப்பாவின்மீதே குற்றத்தை ஐயமின்றி நம்பும்படியான வழியில் ஜோடித்திருக்கின்றார்கள். பார்ப் பதற்கென்னவோ வழக்கும் சற்றும் சந்தேகிக்க இடமின்றிக் குற்றமுற்றும் செல்லப்பாதான் செய்திருப்பான் என்று கூறும் படியாக இருக்கின்றது. ஆனால் ஆய்ந்தோய்ந்து பார்த்தால் மட்டும் சற்று வித்தியாசமாயும் நம்பத்தகாததாயும் புலப்படுகின் றது. அந்தப்பெண்மணியோ முற்றும் ஆங்கிலேயர்களைப் போலவே இருக்கப்பட்டவளென அவளது நடத்தையினால் தெரிகின்றது. அன்று இரவு வந்தவனைக் கைகுலுக்கி அழைத்துச்சென்று தன் பக் கத்திலேயே உட்கார வைத்துக்கொண்டாள் என்பது நமது பழைய நாகரிகத்திற்கு நேர்விரோதமாகவும் புது நாகரிகமாகவும் இருக் கிறது. அவள் எல்லோரிடத்திலும் அவ்வாறுதான் இருந்துவரு கிறாள். அன்று மாலையில் செல்லப்பாவைக் கடற்கரையில் சந்தித்த காலத்தில் அவனை அலட்சியமாக எண்ணி மிகவும் உதாசீனமாகப் பேசி நகைத்து 'உன்னுடைய சம்பந்தம் எனக்கு வேண்டாம்' என்று கண்டிப்பாகக் கூறியவள் இரவில் அவ்வாறு மரியாதைசெய்து அவனை அழைத்திருப்பாளா? அவ்வாறு அழைத்தவள் அவன் செல் லப்பாவெனத் தெரிந்திருந்தால் அவனை விலக்காமல் சாதாரணமாக இருப்பாளா? தனக்குப் பிடித்தமில்லாத மனிதனை நடத்துவதற்கும் பிடித்தமுள்ளவனை நடத்துவதற்கும் வித்தியாசமில்லையா? இதில் ஏதோ மர்மமேதான் நடந்திருக்கின்றது. சரி, போலீஸாரிடம் சென்று அந்தக் கடிதம், துப்பாக்கி முதலியவற்றைப் பார்த்துவிட்டு வருவோம். பிறகு அடையாற்று பங்களாவிற்கே சென்று சிலவிஷயங் களைத் தெரிந்து கொள்ளவேண்டும். பச்சை என்னும் வேலைக்காரனை ஆஸ்பத்திரிக்குச்சென்று பார்த்துப் பேசவேண்டும். இவைகளை முத

வில் செய்து கொண்டால் மேலே நடக்கவேண்டிய விஷயத்தைப்பிறகு பார்த்துக்கொள்ளலாம். நீர் முதலியாருக்கு இச்செய்தியைக் கூருமல் வந்தது ஒருவிதத்தில் உசிதந்தான். அவர் ஏற்கெனவே கலங்கி யிருப்பதால் இச்செய்தி இன்னும் அவரை உருக்குலைத்துவிடும். நாம் அவ்விடங்களுக்கெல்லாம் சென்று தகவலைத் தெரிந்துகொண்டு பிறகே முதலியாருக்குத் தைரியத்தோடு தெரிவிப்போம். பொழுதும் சாயுந் தருணமாய்விட்டது; நாம் எழுந்திருப்போம்'' என்று கூறியவண்ணம் எழுந்து உடையணிந்துகொண்டு தமது மோட்டார் வண்டியைத் தயார் செய்யச்சொன்னுர்; பிறகு குமாஸ்தாவுடன் வண்டியில் அமர்ந்து போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று போலீஸ் அதிகாரியைக் கண்டு பேசலானுர்.

நாயுடு:—முல்லையூர் ஜெமீந்தார் தன் புதல்வனின் விஷயமாக இன்று வந்திருக்கும் கொலை கேஸுக்காக என்னிடம் வந்து நான் இதில் சற்று வேலை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். நீங்கள் எல்லா வேலையையும் ஒழுங்காகச் செய்து வரும்போது நான் எதற்கென்று கூறியும் அவருடைய அக்ஞானத்தினுல் வெகுதூரம் வேண்டி, கூடவே அவருடைய குமாஸ்தாவையும் அனுப்பியிருக்கிறுர். அந்தக் கேஸ் விவரத்தையும் அங்கு கிடைத்த சாமான்களையும் தயவு செய்து காட்ட வேண்டுகிறேன். என்னுல் என்ன ஆகப்போகிறது? நீங்களெல்லோரும் எத்தனையோ விசித்திரமான வேலைகளை யெல்லாம் புதியது புதியதாகச் செய்கிறீர்கள். நான் விருத்தாப்பியனுய் விட்டேன் என்றுலும் பெரிய மனிதரின் வார்த்தையைத் தட்டமாட்டாமல் ஏதோ வந்தேன்— என்று தன்னை மிகவும் தாழ்மையாகப் பேசிக்கொண்டார்.

இதைக்கேட்ட போலீஸ் அதிகாரி உள்ளுக்குள் இவர் மீதுள்ள பொருமையை அடக்கிக்கொண்டு வெகு மரியாதையாக உபசாரத்தோடு அவரைத் தகுந்த ஆசனத்திலிருத்தி, பேசத்தொடங்கி ''ஆஹா! தாங்கள் இந்தப் போலீஸ் உத்தியோகத்தில் வெகுநாளாக உழைத்துப் பிரக்யாதி யடைந்ததை இவ்வுலகம் மறந்து விடுமா? ஆமாம். இந்த வழக்கில் துப்புகண்டுபிடிக்கும்படியான விஷயம் எதுவுமில்லையே! எல்லாம் வெளிப்படையாகவும் சந்தேகிப்பதற்கே இடமின்றியும் விளக்கமாக இருக்கின்றனவே! இதில் எந்த விஷயத்தைக்

கண்டு பிடிப்பது?'' என்று பேசிக்கொண்டே வருகையில் நாயுடு பேசத் தொடங்கி "எல்லாம் வெட்ட வெளிச்சமாக இருக்கின்றது வாஸ்த வந்தான். ஆனாலும் நானும் அதை அறிந்து கொள்ளவேண்டுமென்று தான் கேட்கிறேன். செல்லப்பா நேற்று இரவு ரத்னசாமி வீட்டைவிட்டு வெளியில் செல்லவில்லை என்று கூறுகிறான். குற்றமோ செல்லப்பாவின் மீதே வந்திருக்கின்றது, இதன் உண்மையை அறியவேண்டியது அவசியமில்லையா ?'' என்றார்.

இதைக்கேட்ட போலீஸ் அதிகாரி, கொல்லென்று நகைத்தபடி "உம்இதைஓர்பிரமாதமாகக்கண்டுபிடிக்கவேண்டுமா?எந்தத்திருடன் தான் செய்ததை ஒப்புக்கொள்வான்? அவனைத் தாசி நீலாமணியின் வீட்டில் கையும் களவுமாகப் பிடித்தபோது அவன்தான் திருடியதாக ஒப்புக்கொண்டானா? தான் பக்கத்து வீட்டில் வந்ததாகவும் எவனோ திருடிவிட்டுத் தன்மேல் பழிவைத்து இங்கு இழுத்து விட்டதாகவும் கூறிய கட்டுக்கதையைவிட இது ஓர் வியப்பா? தான் ராத்திரி இங்கு வந்தேன் என்று கூறுவானேயானால் அவன் குற்றவாளி என ஒப்புக்கொண்ட மாதிரியாக வில்லையா? இந்த வழக்கில் மறை பொருள் என்னும் விஷயமே எதுவும்காணப்படவில்லையே!'' என்றார். போலீஸ் அதிகாரி ஏளனமாக நகைத்ததைக்கண்ட நாயுடுகாரு மனதிற்குள் வருத்தமடைந்தார். தாம் முன்னால் குமாஸ்தாவிடத்தில் கூறிய விஷயங்களை இவர்களிடத்தில் கூற மனமற்றவராய் வாளாவிருந்து ஏதோ காரணத்தைக் கூறவேண்டி, அது ஒன்றை மாத்திரம் கூறினார். ஏதோ மூடத்தனமாய்க் கூறியதாக எண்ணி அவர் நகைத்ததைத் தாம் வெளிக்குக் காட்டிக்கொள்ளாமல் மேலும் பேசத்தொடங்கி "தாங்கள் கூறுவதெல்லாம் உண்மையாயிருந்த போதிலும் அவர்களுடைய மனத்திருப்திக்காக நான் செய்ய வேண்டியதைச் செய்துவிட்டால் பிறகு உங்கள் கட்சி பலித்தாலும் அவர்களுக்கு விதி என மனம் நிம்மதியாக விருக்கும்'' என்றார்.

இதைக்கேட்ட அதிகாரி, "ஆகா! தாங்கள் கேட்பதை நான் மறுக்கவில்லையே! வழக்கில் ரகஸியமில்லையே என்று கூறினேன். இதோ காட்டுகிறேன்'' என்று கூறிவிட்டு எழுந்து சென்று செல்லப்பாவின் ரத்தம்படிந்த அங்கவஸ்திரம், துப்பாக்கி, கடிதம் முதலியவற்றை நாயுடுவிற்குக் காட்டி அங்கு நடந்த விஷயம், பச்சை

முதலிய வேலையாட்கள், முதலியார் முதலியவர்கள் கூறிய வாக்கு மூலம் முதலிய எல்லாவற்றையும் கூறினர். இதைக் கேட்டுக் கொண்ட நாயுடு அந்தக் கடிதத்தையும் உத்தரியத்தையும் வெகு நேரம் மாறி மாறிப் பார்த்தார்; ஏதோ தமக்குள் ஆழ்ந்த யோசனை செய்தார்; பிறகு துப்பாக்கியையும் பார்த்துவிட்டு எல்லாவற்றை யும் கீழே வைத்துவிட்டு அதிகாரியை நோக்கி, "ஆமாம், இந்தக் கொலை எவ்வாறு நடந்திருக்கும் என்று உங்களுக்குத் தோன்று கின்றது?" என்றார்.

அதிகாரி:—இதில் தோன்றுவது யாதிருக்கின்றது? அன்று செல்லப்பா நீலாமணி வீட்டில் களவாடி சிறையிலிருந்த தருணம் தனக்கு உதவி புரியும்படியாகக் காந்தாமணிக்கு அவன் எழுதிய கடிதத்திற்கு அவள் அதனை லக்ஷியம் செய்யாமல் தான் வர முடியாதென்றும், அவனை இனி நண்பனாக ஏற்றுக்கொள்ளமாட் டேன் என்றும், அவனுக்கும் தனக்கும் யாதொரு சம்பந்தமு மில்லை என்றும் கண்டிப்பாகக் கூறிவிட்டபடியால், அவன் அவள்மீது கடுமையான கோபமும் பகையும் கொண்டிருக்கிறான். பிறகு அதையடக்கிக்கொண்டு அன்று கடற்கரையில் சந்தித் துக் கபடமாகவே தான் கோபமற்றவன்போல் நடித்துப் பேசி யிருக்கிறான். அப்போதும் அந்தப் பெண்மணி கடினமாகப் பேசி யிருக்கிறாள். அந்த அகங்காரத்தினால் அன்றே அவன் மாறுவேடத்தில் வந்து கொலை செய்திருக்கிறான். கொலைசெய்ய வந்த தருணமும் அவள் அவனை மறுத்துச் சண்டைசெய்திருப்பதாக வும் அப்போது அவன் அவளைப்பிடித்து இழுத்தோ அல்லது உதைத்தோ கொலை செய்திருக்க வேண்டுமென்றும் தெரிகின்றது. ஏனெனில் அவளது தலையில் அணிந்திருந்த புஷ்பங்கள் தாறுமாறாகச் சிதறிக்கிடந்தன. அதிலிருந்து இவ்வாறு ஊகிக்க இடமிருக்கின்றது. அவன் வேறு எதைக் கவனித்துக் கொண்டிருந்த தருணமோ இந்தக் கடிதத்தை அவள் எழுத ஆரம்பித்திருக்க வேண்டும்; அதற்குள் அவன் தன்னைக் கவனித்து விடுவான் என்ற சந் தேகம் தோன்றியிருக்கலாம்; ஆதலால் அந்தக் கடிதத்தைப் பூர்த் திசெய்யாமல் மொட்டையாய் அந்த மட்டோடு அங்கு சுருட்டிப் போட்டிருக்கிறாள். அவனுக்கு அவள் மேலிருக்கும் பகைமையால்

அவள் சவத்தைக்கூடச் சின்ன பின்னம் செய்யவெண்ணி மீனுக்கிரை யாகக் கடலில் போட்டுவிடுவதாகக் கூறியிருக்கிறான். அவ்வாறே செய்து மிருக்க வேண்டும். இதில் ரகஸியமானது ஒன்றுமில்லையே!" என்றார்.

நாயுடு:—"ரகஸிய மொன்றுமில்லை; எல்லாம் வெட்ட வெளியாக இருப்பதால் தான் என்ன வென்று கேட்டேன். சரி நான் உத்தரவு பெற்றுக் கொள்கிறேன்." என்று கூறியவாறு எழுந்து குமாஸ்தா வைப்பார்த்து, "ஐயா! போலீசாரை விடச் சாமார்த்தியமாக நான் என்ன செய்ய விருக்கிறது? எல்லாச் சாக்ஷிகளும் செல்லப்பாவுக்கு விரோதமாகத்தா னிருக்கின்றன. ஏதோ அவருடைய பிரியத்திற்காக நான் சற்றுக் கவனிக்கலாமென்று வந்தேன். இதில் என்னாலாகக் கூடியது ஒன்றுமில்லை; எல்லாம் வெளிப்படையாகத்தா னிருக்கிறது. ஈசனிருக்கிறார்; வாருங்கள்" என்று வேஷ வார்த்தை கூறியபடி போய்விட்டார். அங்கிருந்துநேரேஅடையாற்றுப்பங்களாவைநோக்கி வண்டியைச் செலுத்திப் பின்வருமாறு சம்பாஷித்தார்கள்.

நாயுடு:—பார்த்தீரா! போலீஸாருடைய ஜோடிப்பு எவ்வாறி ருக்கின்றது?

குமாஸ்தா:—தாங்கள்தான் வெகு தந்திரமாயும் கருத்து வேறு கவும் பேச்சு வேறுகவும் பேசி ஆளை ஏமாற்றி விட்டீர்களே! தாங் கள் என்னிடத்தில் கூறிய சந்தேகங்களை யெல்லாம் அங்கு ஒன்று கூட வெளிவிடாமல் இரவு செல்லப்பா அங்கேயே இருந்ததாகக் கூறுவதை மாத்திரம் சந்தேகிப்பதாகக் காண்பித்துக் கூறிவிட்டீர் களே! உம். எத்தனையோ மலைபோல் தந்திரம் செய்ய வல்லமையுள்ள தாங்கள் இது சொல்லியது வியப்பா? அங்கு அவர் கூறியதில் தமக் கென்ன தோன்றுகின்றது?

நாயுடு:—எனக்குத் தோன்றுவதெல்லாம் என்வேலை முடியும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டானால் தான் இனிமேல் கூறுவேன். நான்தான் முன்னால் சில சந்தேகங்கள் கூறினேன். இன்னும் சில இருக்கின்றன. அவைகளை இப்போது கூறமுடியாது. ஆகையால் காரியத்தைக் கவனிப்போம்.

இதற்குள் இருவரும் பங்களாவை அடைந்தார்கள். அப்போது நன்றாய் இருட்டி விட்டது. அந்தப் பங்களாவின் வீதியில் விளக்கில்

லாமல் அது களையற்றுத் துயரமே மேற்கொண்டிருந்தது. காந்தாமணியின் அன்னையும் பிதாவும் தாங்கவொண்ணாத விசனத்திலாழ்ந்து கதறினார்கள். அவர்களுக்கு வேண்டிய சிநேகிதர்கள் ஆண்பாலரும் பெண்பாலருமாகக் கொலைச்செய்தி வெளியில் பரவியது முதல் கும்பல் கும்பலாக வந்து வருந்திக் கண்ணீர்விட்டு "அறிவிலிகளைப்போல் அலறுவது அழகாகாது; இதுவும் ஒரு காலவிதி என்று எண்ணி நாம் தேறுதல் அடையவேண்டும்" என்று பலவிதமாகத் தேறுதல் கூறினார்கள். தாங்கொணுத் துயரம் ஒருபுறம் பாதிக்கின்றதென்றாலும் அவர்கள் தங்களுக்குத் தேறுதல் கூறும் பிரபுக்களின் வார்த்தைக்கு மதிப்புகொடுக்கும்பொருட்டுத்தங்களுடைய துயரத்தையொருவாறு உள்ளடக்கிக்கொண்டு வந்தவர்களிடம் காந்தாமணியைப்பற்றியே பேசியிருந்தபின் சிறிது ஆகாரம் உட்கொண்டு அன்றைப் பொழுதைக் கழித்தார்கள். அப்போது நாயுடுவும் குமாஸ்தாவும் அங்கு வந்து சேர்ந்தார்கள். இவர்கள் வரவை வேலைக்காரன் முதலியாருக்குத் தெரிவிக்க அவர் மெல்ல எழுந்து வீதிப்பக்கம் வந்து நாயுடுவையும் குமாஸ்தாவையும் கண்டு "என்ன விசேஷம்?" என்று கேட்டார். முதலியாருக்குக் குமாஸ்தாவை இன்னாரென்று தெரியமாட்டாதாகையால் நாயுடுவை மாத்திரம் கேள்வியிலும் பத்திரிகை மூலமாகவும் தெரிந்துகொண்டிருக்கின்றபடியாலும் நாயுடுவின் கூடவந்த மனிதனென்றே குமாஸ்தாவை எண்ணினார்.

நாயுடுமுதலியாரைப்பார்த்து மிகவும் பரிதாபப்பட்டு "தங்களுக்கு இத்தகைய துயரம் வந்ததைக்கேட்ட என்மனம் மிகவும் பதைத்து வருந்திற்று. என்ன அநியாயம்! என்ன கொடுமையான கோரசம்பவம்நடந்துவிட்டது! உம். எல்லாம் கால வித்தியாசம்தான்......நேற்றுக் கொலைநடந்த இடத்தைச் சற்றுப்பார்க்கவேண்டும். தயைசெய்து காண்பிக்க வேண்டும்" என்றார். இதைக்கேட்ட முதலியார்...உம் அவ்விடத்தில் என்ன இருக்கின்றது? இடத்தைப் பார்ப்பதனால் எங்கள் காந்தாமணியை மீண்டும் அங்குக் காணப்போகிறோமா ? அதற்கென்ன பாருங்கள்" என்று கூறியவாறு காந்தாமணியின் அறைக்கு அழைத்துச் சென்று முற்றும் காட்டினார். அவ்வறையின் அமைப்பையும் அங்குள்ள மற்ற எல்லாவித சாமான்கள், ரத்தம்படிந்த படுக்கைவிரிப்பு முதலியவற்றைக் குறிப்பாகப் பார்த்துக் கொண்டார். வெளி

லென்ற படுக்கைவிரிப்பிலும் நிரம்ப ரத்தம்பட்டிருப்பதை உற்றுக்கவ னித்தார். அதைக் கையில் எடுத்துக்கொண்டு "ஐயா! இந்தப் படுக்கை விரிப்பை என்னிடம் சில தினத்திற்குக் கொடுத்துவைக்க வேண் டும். பிறகு உங்களிடத்திலேயே ஒப்பித்து விடுகிறேன்." என்றார்.

முதலியார்:—உம். என் கண்மணியையே தோற்றுவிட்டேன்; இது போனாலென்ன இருந்தாலென்ன? எடுத்துக் கொள்ளுங்கள்.

நாயுடு:—நான் இன்னானென்று தங்களுக்குத் தெரிந்திருக்கு மாகையால் நான் மேலே எதுவும் சொல்ல வேண்டுவதில்லை; இதை எடுத்துக் கொள்கிறேன்—என்று கூறிப்படுக்கை விரிப்பை எடுத்துக் கொண்டு "நான்சென்று வருகிறேன்"—என்று கூறிவிட்டு அவ்விடத் தைவிட்டுப் புறப்பட்டு வண்டியில் ஏறி பச்சையை சிகிச்சைக்காக அனுப்பப்பட்டிருக்கும் ஆஸ்பத்திரியை நோக்கி வண்டியைச்செலுத்து கையில், இருவரும் பலபடி பேசிக் கொண்டே சென்றார்கள்.

குமாஸ்தா:—தாங்கள் இன்னாரால் அனுப்பப்பட்டு வந்ததாகத் தாங்களும் கூறவில்லை; அவரும் அதைப்பற்றிக் கேட்கவில்லையே!

நாயுடு:—நான் இன்னாரால் அனுப்பப்பட்டு வந்ததாகத் தெரியா திருப்பதும் நலந்தான். ஏனெனில் அவர்கள் செல்லப்பாவின் மீது கொண்டிருக்கும் ஆக்ரோஷத்திற்கும் வேலை இசகு பிசகாக நடந் திருப்பதற்கும் அதை அவர்கள் தெரிந்துகொள்ளா திருப்பதே நல் லது. செல்லப்பாதான் இக் கொலையைச் செய்தான் என்பது அவர்க ளுடைய பூர்ணமான தீர்மானமா யிருக்கிறது. அதற்கு விரோத மாக நாம் அவன் குற்றம் செய்யவில்லை என்று நிரூபிக்க வந்திருக்கி றோம். இதனை அவர்கள் அறிந்தால் நம்மை அவ்விடத்திற்கே அழை த்துச் சென்றிருக்க மாட்டார்கள். இந்தப் படுக்கை விரிப்பும் கிடைத் திராது. ஆகையால் அவர்கள் கேட்காம லிருந்ததே மெத்த அனு கூலம். அவர்கள் ஒருகால் கேட்டிருந்தாலும் நான் உண்மையை உரைக்கத் தயாராகவில்லை. ஏதோ துக்கம் விசாரிக்கச் சென்றவன் போலவோ அல்லது போலீசாரைச்சேர்ந்த பாவனையோடோ சென்ற தாகவே கூறுவதாக விருந்தேன். அவர்கள் எதுவும் பேசாமையால் நான் துக்கம் விசாரித்தாற்போலவும் ஏதோ இதில் சம்பந்தப்பட்ட வன் போலும் இருவகையிலும் படும்படியாகப்பேசிவிட்டு வந்து விட் டேன். அங்குச்செல்லப்பாவின் அங்கவஸ்திரத்தைப் பார்த்ததிலும்

இந்தப் படுக்கை விரிப்பைப் பார்த்ததிலும் எனக்கு முக்கியமான பெரிய சந்தேகம் உண்டாயிருக்கிறது. அதை ஈசன் எவ்வாறு விளக்கி வைப்பாரோ தெரியவில்லை" என்று பேசிக்கொண்டே வருகையில் வண்டி அதிவேகமாகச் சென்று ஆஸ்பத்திரியின் வாயிலையடைந்தது. இருவரும் இறங்கி ஆஸ்பத்திரியின் அதிகாரியைக் கண்டு தாங்கள் பச்சை என்பவனைப் பார்க்கவேண்டும் என்று தெரிவித்தார்கள்.

ஆஸ்பத்திரியின் அதிகாரி நாயுடுவைக்கண்டதும் பெரிதும் மகிழ்ந்தவராய் "வாருங்கள்! வாருங்கள்! தங்களைப் பார்த்து வெகு நாளாய் விட்டது" என்று விசாரித்துப் பச்சை படுத்திருக்கும் இடத்திற்கு இருவரையும் அழைத்துச் சென்றார். பச்சை காலில் கட்டுக் கட்டிக்கொண்டு படுத்திருந்தான். நாயுடுகாரு பச்சையருகில் சென்று நகைத்தபடி, "நான் யார் உனக்குத் தெரியுமா?" என்று கேட்டார்! பச்சை "ஐயா! தாங்கள் யாரோ எனக்குத் தெரியவில்லையே!" என்றான்.

நாயுடு:—உனக்கு என்னைத் தெரியவேண்டிய ப்ரமேயம் வந்ததில்லை. நான் வெறுமனே கேட்டேன். நான் போலீஸிலிருந்து வந்திருக்கிறேன். உன்னிடம் சில சங்கதிகள் தெரிந்துகொள்ள வேண்டும். அதாவது நேற்றிரவு கொலை நடந்த விஷயமாய் உனக்குத் தெரிந்த சகலமான வரலாற்றையும் கூறு" என்றார்.

பச்சை:—(பயத்தோடு பேசத்தொடங்கிக் கொலை விஷயமாகத் தனக்குத் தெரிந்த விஷயம் போலீஸாரிடம் கூறியதை எல்லாம் ஒன்று விடாமல் கூறி முடித்து) "ஐயோ! எங்க சின்ன எஜமானியம்மாளை அநியாயமாகப் பாவி கொன்று விட்டானே!" என்று கண்ணீர் விட்டான். நாயுடு பச்சையைச் சமாதானம் செய்து, "ஏனப்பா! அங்கு காந்தாமணியைத் தேடிக்கொண்டு வந்த மனிதன் செல்லப்பா தான் என்று உனக்கு அவன் வரும்போதே தெரியுமா?" என்றார்.

பச்சை:—ஐயோ! எனக்கு அப்போதே தெரிந்திருந்தால் நான் அந்தச் சண்டாளனை உள்ளே விட்டிருக்கவே மாட்டேன். அவன் வேறு வேடத்துடன் வந்ததனால் நான் ஏமாந்துவிட்டேன். மேலும் எங்கள் எஜமானியம்மாளிடம் எத்தனையோ சினேகிதர்கள் வருவதுண்டு. அவ்வாறு யாரோ வந்ததாக நான் எண்ணியிருந்தேன். கடை

சியில் அவன் "செல்லப்பாவின் சாமர்த்தியத்தைப் பார்த்தாயா?" என்று கூறியபிறகே அவன் செல்லப்பா என்பதை நான் தெரிந்து கொண்டேன்.

நாயுடு:—அவர்கள் பேசிக்கொண்டதில் உனக்கு ஒரு வார்த்தைகூடக் காதில் விழவில்லையா? அல்லது ஏதேனும் விழுந்ததா?

பச்சை:—எனக்கு எதுவும் கேட்கவில்லை. கேட்டால் சொல்ல மாட்டேனா?

நாயுடு:—நீ உள்ளே சென்ற சமயம் அவர்கள் என்ன செய்து கொண்டிருந்தார்கள்?

பச்சை:—நான் வாயிற்படியண்டை வரும்போதே சுட்டு விட்டானே! நான் தூக்கக் கலக்கத்தில் வந்தமையால் எனக்கு அவ்வளவு நிதானம் தெரியவில்லை. சுட்ட அதிர்ச்சியால் நான் அப்படியே ப்ரக்ஞை யற்று விழுந்து விட்டேன். அப்போது என்னநடந்ததோ எனக்குத் தெரியாதே.

நாயுடு:—காந்தாமணியை அவன் தூக்கிக்கொண்டு சென்ற போது அவளுக்குச் சிறிது உயிர் இருந்ததா, அல்லது இறந்த சவமா என்பது உனக்குத் தெரியுமா?

பச்சை:—ஐயோ! உயிர் இருந்தால் அவர்கள் கத்தி யிருக்கமாட்டார்களா? அவன்தான் அந்தம்மாளைச் சோபாவில் படுத்திருக்கும் போது கழுத்தையோ மார்பையோ அமுக்கியதாக நான் கண்விழித்ததும் கண்டேனே!

நாயுடு:—ஆமாம். அவன் கழுத்தை அமுக்கியபோது அவள் உயிர் போய்விட்டதென்பது உண்மையாக உனக்குத் தெரியுமா? அவன் கழுத்தையமுக்கி யிருந்தால் ரத்தம் வருவானேன்?

பச்சை:—ஐயா! எனக்கு நினைவுவந்ததும் நான் கண்ணைத் திறந்து பார்த்தேன். ஆனால் எப்போதும் எனக்கு அதேமயமாக விருந்தது. மேலும் அந்த வாயிற்படிக்கும் அவர்களிருந்த இடத்திற்கும் வெகு தூர மிருந்தமையாலும் எனக்குக் காலில் சுட்ட பாதையின் மயக்கத்தாலும் அவ்வளவு திட்டமாக எனக்குத் தெரியவில்லை, அவன் என்னைச் சுட்டமாதிரியே எங்கம்மாளையும் சுட்டிருப்பான். பின்னும் மென்னியையும் பிடித்திருக்கிறான். தோளின்மீது சாத்திக்

கொண்டு போகும்போது கால் கைகளெல்லாம் ஆடியவாறே சென்றன. ஐயோ! நீங்கள் கூறியபடி சிறிது உயிரிருந்தாலும் எங்கம்மாள் இறவாமல் பிழைத்துக்கொண்டிருந்தால் போதுமே! அந்தப் பாவி கடலில் போட்டு விடுவதாகக் கூறிச் சென்றவாறு அவன் போட்டுவிட்டிருப்பானே! ஐயோ! என் செய்வேன்?—என்று கண்ணீர் விட்டுப் பின்னும் கலங்கினான்.

நாயுடு:—நீ சொல்லியது போலத்தா னிருக்கலாம்; சரி உங்கம்மாளுக்கு யார் யார் சினேகிதர்கள் என்பது உனக்குத் தெரியுமா?

பச்சை:—எனக்கு அவ்வளவு திட்டமாகத் தெரியாது; எங்கம்மாவின் வண்டியோட்டிக்குத் தெரியும்.

நாயுடு:—அவன் வீடு எங்கிருக்கிறது; உனக்குத் தெரியுமா?

பச்சை:—அடையாற்றிலேயே அவர்கள் பங்களாவிற்குப் பின் தெருவில் இருக்கிறது.

நாயுடு:—அவன் வீட்டிற்கு அடையாளம் ஏதாகிலும் தெரியுமா?

பச்சை:—அந்த வாடையில் உள்ள எல்லா வீடுகளுக்கும் தெருவில் திண்ணையுண்டு. இவன் வீட்டிற்கு மாத்திரம் திண்ணையில்லை, அதுவே அடையாளம்.

நாயுடு:—அவன் வீட்டில் யார் யார் இருக்கிறார்கள்?

பச்சை:—அவனுடைய பிள்ளையொன்றும் பெண்ஜாதி அவனுடைய தாயார் இவ்வளவு பேர்தான் இருக்கிறார்கள்.

நாயுடு:—"சரி, நான் சென்று வருகிறேன். நீ கால் ரணத்தைக் குணப்படுத்திக்கொண்டு ஜாக்கிரதையாக வந்துசேர்"—என்று கூறிக் கொண்டே எழுந்துபோய் அதிகாரியிடத்தில் உத்தரவு பெற்றுக் கொண்டு வண்டியிலமர்ந்து வண்டியை விட்டு விட்டார்கள்.

"வண்டியோட்டி யிடத்தில் சென்று நாம் திடீரென்று காந்தாமணியின் நண்பர்கள் சிநேகிதர்கள் முதலியவர்களின் விலாசத்தைத் தெரிந்து கொள்வதென்றால் அது நடக்குமா? அவளுடைய நண்பர்களுடைய விலாசத்தைக் கேட்டால், அவன் சொல்வானோ மாட்டானோ? நீ எதற்காகக் கேட்கிறாய் என்று கேட்பானேயானால் என்ன சொல்வது, இவைகளை யெல்லாம் தீர ஆலோசித்துக் கொண்டுதான்

அவனிடம் சொல்லவேண்டும்'' என்று நினைத்து நாயுடுகாரு வண்டியைத் தமதில்லத்திற்கே ஓட்டச் செய்தார். அப்போது இரவு சுமார் பத்து மணிக்குமேல் ஆய்விட்டது. வண்டியும் திருவொற்றியூரை அடைந்தது. நாயுடு குமாஸ்தாவைப் பார்த்து ''நீர் இங்கேயே சாப்பிட்டுவிட்டுப் படுத்துக்கொள்ளும். காலையில் நானும் கூட வருகிறேன்; முதலியாரிடம் தெரிவிக்கலாம்'' என்றார். இரவு வெகுநேரமாய்விட்டபடியால் குமாஸ்தாவும் அதற்கு ஒத்துக்கொண்டு அங்கேயே போஜன மருந்திவிட்டுப் படுத்தான். சைதாப்பேட்டை பங்களாவில் எல்லோரும் போஜனம் செய்து முடித்துக்கொண்டு படுத்துவிட்டார்கள். முதலியார் தம் மனதிலிருக்கும் கவலைகளையெல்லாம் அடக்கிக்கொண்டு சுந்தரனை மகிழ்விக்கும் பொருட்டுத் தானும் சற்று மகிழ்ந்ததுபோல் நடித்து விருந்து செய்வித்தார்; இரவு முழுவதும் நித்திரை கொள்ளாமல் மனக் கலக்கமாகவே புரண்டுகொண்டே இருந்தார். அவர் மனதில் செல்லப்பாவின் நினைவே குடிகொண்டிருந்தது. அன்று குமாஸ்தா தன்னிடம் சொல்லிக்கொள்ளாமல் எங்கேயோ போய்விட்டதாக எண்ணி அவன் வீட்டிற்கு ஆளையனுப்பிக் கேட்டு வரும்படிக்குச் செய்தார். அங்கும் குமாஸ்தா வரவில்லை என்று செய்தி கிடைத்து விட்டது. அவர் மனதில் மட்டும் குழப்பமும் ஒருவிதமான வயிற்றுக் கொதிப்பும் அவரையறியாமலே உண்டாய்அவரைவருத்தின; அவர்எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணித் தவித்தவாறு தமதறையில் படுத்திருந்தார்; அப்படியே கண்ணயர்ந்து விட்டார்; சுந்தரன் அன்று அங்கு முதலியாருடைய கட்டாயத்தின் பேரிலும் பத்மவல்லியின் முகாரவிந்த வின்பத்தை விட்டுப் பிரிய மனம் வராமலும் தங்கினன். என்றாலும் அவனுடைய தந்தைக்கு தேக அசௌக்யமென்று வந்த கடிதத்தைக் கண்டதும் அவன் நினைவு முற்றும் அவனுடைய தந்தையின் மீதே சென்று அவனை வருத்திக் கொண்டிருந்தது. தந்தைக்கு தேக சுகம் எவ்வாறிருக்கின்றதோ? நான் உடனே வந்து சேரவில்லை என்று என்மீது வருத்தங்கொள்வாரோ? நான் இந்தவிடத்தில் இருவகைக் கட்டுப்பாட்டை மீறி நடக்க சாதியமற்றவனாய் விட்டேனே! நான் சென்று பார்ப்பதற்குள் தந்தை நன்றாகப் பூர்ண சுகமடைந்திருப்பாரா?'' என்று பலவிதமாக எண்ணியவாறு படுத்திருந்தான்.

பத்மவல்லி கடுமையான நோயினால் பீடிக்கப்பட்டாளானதாலும் நித்திரையே கொள்ளாமலிருந்தபடியாலும் அன்று சற்று எழுந்து நடமாடி விருந்துண்டதாலும் படுத்த உடனே அயர்ந்து நித்திரையில் ஆழ்ந்துவிட்டாள். அவள் தூக்கத்தில் ஏதோ கெட்ட கனவு கண்டு பயந்து அலறியவாறு கோவெனக் கூவி ஏதோ வாய் குளறிக் கத்தினாள் அப்போது பத்து மணிக்கு மேலிருக்கலாம். அவளுடைய அறைக்குப் பக்கத்து ஹாலிலேயே சுந்தரன் எண்ணமிட்டுப் படுத்திருந்தமையால் அவன் காதில் இவள் கூச்சலிட்டது கேட்டது. உடனே அவன் திடுக்கிட்டு நடுங்கினான். "ஐயோ! என்ன காரணத்தினால் தூங்கிக்கொண்டிருந்தவள் திடீரென்று கத்துகின்றாள்? செய்தி இன்னதென்று தெரியவில்லையே! அவளுடைய பெற்றோர்களும் விழித்துக் கொள்ளாமல் நித்திரை செய்கின்றார்களே! இந்தச் சமயம் நாமும் சென்று என்ன காரணமென்று விசாரிக்காமலிருக்கலாகுமா? ஆபத்தில் உதவாமல் மயங்குவதா ஆண்மைக்கழகு?" என்று இமைப் பொழுதில் எண்ணிச் சரேலென்று எழுந்து பத்மத்தின் அறைக்கதவைத்திறந்து வெளியிலிருந்தபடியே எட்டிப் பார்த்தான். பத்மத்தின் தேகம் கம்பக்குலைச்சலாக குலைகின்றது! அவள் ஏதோ கூச்சலிட்டு வாய்குளறியவாறு இருக்கின்றாள். இதைக்கண்ட சுந்தரன் ஒரே பாய்ச்சலாய் உள்ளே பத்மத்தருகில் சென்று பதறப்பதற "ஆ என்ன அம்மணீ! என்ன! என்ன! ஏன் கத்துகின்றீர்கள்? என்ன செய்தி?" என்று கூறியவாறு அங்கு அருகிலிருந்த ஜலத்தை எடுத்து அவள் முகத்தில் தெளித்து மீண்டும் "அம்மணீ! அம்மணீ!" என்று கூவியழைத்தான். பத்மத்திற்கு இவன் கூறியது ஏதோ கனவு காண்பதுபோல் இருந்தது. அவள் அலறியவாறு படுக்கையைவிட்டு எழுந்து "அம்மா! அம்மா!" என்று கூவிக்கொண்டே கையை விரித்துக் கொண்டு எழுந்து நிற்கத்தொடங்கினாள். இதைக்கண்ட சுந்தரன் "ஐயோ என்னைத் தனது அன்னை என எண்ணியிருக்கின்றாள் போலும்!" என்று கருதி "அம்மணீ! நான்தான் நிற்கின்றேன். என்ன காரணத்தால் தாங்கள் கூச்சலிட்டீர்கள்? ஏன் உங்கள் தேகம் இவ்வாறு நடுங்குகின்றது?" என்று பிரியத்துடன் கேட்டான்.

அப்போதே பத்மம் சற்றுத் தெளிவுற்றாள். பின் அவளுடைய கூச்சலும் நின்றது. ஆனால் தேக நடுக்கம் நிற்கவில்லை. இந்த நிலைமை

காப்பக
182837

லேயே சுந்தரன் அங்கு நிற்பதைக்கண்டு லஜ்ஜையடைந்தவளாய்த் தலை குனிந்தபடியே "ஐயோ! என்ன வெட்கக்கேடு! கேவலம் மதியீனயாய் விட்டேனே! அடடா! தூக்கத்திலிருந்து எல்லோரையும் எழுப்பி விட்டேனே! தற்போது மணி என்னவிருக்கும்? தாங்கள் இன்னுமா நித்திரை செய்யவில்லை?" என்று குரல் நடுங்கியவாறு கேட்டாள்.

சுந்தரன்:—ஆஹா! தாங்கள் மதியீனமாக என்ன செய்து விட்டீர்கள்? என்ன காரணம்? ஏதேனும் கெட்ட கனவு கண்டீர்களா? ஏன் வாய் பிதற்றினீர்கள்? உங்கள் தேகம் இன்னும் நடுங்குவதைப் பார்த்தால் ஏதோ கடுமையான மனக் குழப்பம் ஏற்பட்டு விட்டதாகத் தோற்றுகின்றதே! என்ன செய்தி? நீங்கள் இச்சமயத்தில் மரியாதை செய்யவேண்டாம். முன்னல் உட்காருங்கள். தேகத்தில் வியர்வை வெள்ளமாகக் கிளம்புகின்றதே!

பத்மம்:—ஐயோ! என்னென்று கூறுவேன்? நினைத்தாலும் பயமாக இருக்கின்றது. நான் கூச்சலிட்டதை எண்ண வெட்கமாய் இருக்கின்றது. ஏதோ மிகவும் பயங்கரமான கனவு கண்டு என்னை மீறிய பயத்துடன் கூச்சலிட்டுவிட்டேன். ஐயோ! அக்கனவினை வாயினுல் சொல்லவும் பயமாக இருக்கின்றது. என்னுல் தங்களுக்கு எவ்வளவு கஷ்டம்?

சுந்தரன்:—ஆ! இவைகளெல்லாம் எனக்குக் கஷ்டமா? அப்படி நினைக்கவேண்டாம். அம்மணீ! உட்காருங்கள். பலஹீனமான நிலையில் நிற்கலாகாது. அம்மணீ! என்ன கனவு கண்டீர்களென்பதை நான் அறியக்கூடுமா?

பத்மவல்லி:—அடடா! கனவை அறிவதற்காகத் தாங்கள் இவ்விதம் கேட்கவேண்டுமா? எனதருமை அண்ணு செல்லப்பாவை யாரோ கொலை செய்துவிட்டதாகவும் அந்தச் சவத்தைக் கண்டு அப்பாவும் அம்மாவும் உடனே உயிர் நீத்ததாகவும் கனவு கண்டு இக்கொடுமையைத் தாங்காமல் நானும் கதறிவிட்டேன். அது உரத்த சத்தமாய்க் கேட்டதுபோல் தோன்றுகின்றது. ஐயோ! இதென்ன பயங்கரமான கனவு? இதனுல் ஒன்றும் கெடுதி சம்பவியாமலிருக்குமோ! அதை எண்ணும்போதே தேகம் நடுங்குகின்றதே! என்ன செய்வேன்?" என்று கூறியவாறு கட்டிலைப் பிடித்துக்

கொண்டே அதன்மீது சாய்ந்தாள். சுந்தரன் இதைக் கேட்டுத் திடுக்கிட்டு மனதிற்குள் கலங்கினனென்றாலும் அதை வெளிப்படுத்திக் கொள்ளாமல் "ஆ! அம்மணீ! அதைப்பற்றித் தாங்கள் கவலையே கொள்ளவேண்டாம். தாங்கள் கடுமையான நோயினால் அவஸ்தைப் பட்ட காலத்தில் குடித்துள்ள பலவகை மருந்தினால் உஷ்ண மேற்பட்டிருக்கிறது. அதனாலுண்டான அதிர்ச்சியால் மனம் பலஹீனமான நிலைமையில் இருக்கிறது. இந்தச் சமயத்தில் தாங்கள் தங்களது தமையனின் நிலைமையையே எண்ணியிருப்பதனால் அதே நித்திரையிலும் கனவாக வருகின்றது. அதைக்கண்டு சிறிதும் தாங்கள் கவலையே கொள்ள வேண்டாம். ஏன் இன்னும் தேகம் நடுங்குகின்றது? அதை மறந்து விடுங்கள்; நினைவை வேறு விஷயத்தில் திருப்பிக் கொள்ளுங்கள். நான் இங்கு இருப்பதால் தாங்கள் மெலிந்த இத்தருவாயில் நிற்கும்படியாக இருக்கின்றது. நான் செல்கிறேன். மேலும் இராக்காலத்தில் நான் இங்கு தனித்திருப்பது நன்றாயிராது. இதைக்கண்டால் தமது பெற்றோர் என்ன நினைப்பார்களோ? நான் செல்கிறேன்" என்று கூறியவாறு அரை மனதோடு கடைக்கண்ணால் பத்மாவைப் பார்த்தபடியே மெல்ல அவ்விடத்தை விட்டுக் கிளம்பினான்.

இதைக்கண்ட பத்மவல்லி, சுந்தரன் செல்வதில் மனமற்றவளாய்ப்பேசத்தொடங்கி, "என் மனத்தை மாற்றிக்கொள்ளும்படி கூறியதற்கு உடனே மாறும்படியாகவும் தாங்கள் செல்கிறீர்களா? தாங்கள் கூறியதுபோல் தங்களைப்பற்றி வித்தியாசமாக யாரும் எண்ணவே மாட்டார்கள். அவ்வாறு சிறிதும் எண்ணவேண்டாம். என்னுடைய பயங்கரமான குரலைக்கேட்டு என்னைத் தேற்றும் பொருட்டாக வல்லவா தாங்களிங்கு வந்தீர்கள். அங்ஙன மிருக்க என்னை நான் தேற்றிக் கொள்ளும்படி விட்டுச் செல்வது தான் நன்றோ! நேற்றுக்காலையில் தங்களுடன் என் தந்தை பேசியதை எல்லாம் சமயற்காரியின் மூலமாக நானறிந்து கொண்டேன். அவ்விஷயங்களை உங்கள் மனமார அறிந்தபின்னர் என்னை வேறு மனிதரைப்போல வித்தியாசமாகத் தாங்கள் பேசுவது முறையாகுமா? தாங்கள் இனியப்படி கூறுவது கூடாது" என்று கூறியவாறு அன்னம்போல் நடந்து சுந்தரனுக் கெதிரில் வந்து அவன் பாதங்களைத் தனது ஆநந்த பாஷ்

பமாகிய நீரால் சுத்திசெய்து க்ஷேத்திரமாகிய தாமரை மலர்களினால் அர்ச்சனை செய்வதுபோல் பாதத்தில் மண்டியிட்டுப் பணிந்தாள்.

தன்னை வந்து பத்மம் சரணமடைந்ததை நோக்கிய சுந்தரனின் மனம் கனிந்து மகிழ்ந்து பூரித்தது. அவன் கட்டுமீறிய களிப்புடன் பத்மாவின் இருகரங்களையும் மெல்லப் பிடித்துத் தூக்கி நிற்க வைத்து அக்கரங்களை எடுத்துத் தனது கண்களில் ஒற்றிக்கொண்டு அக்கரங்களைத் தன் முகத்தில் பதித்துக்கொண்டு மறுநிமிடம் சரேலென்று கரத்தை முகத்தினின்றும் எடுத்துக் கையில் பிடித்தபடி பத்மாவைநோக்கி, "ஆ அம்மணி! நான் ஏதேனும் தப்பிதம் செய்துவிட்டேனா? ஐயோ! என்னையே நான் மறந்துவிட்டேன். குற்றமிருப்பின் மன்னிக்க வேண்டுகிறேன்" என்று தான் செய்தது அவளுடைய மனதிற்கு சம்மதமற்றதாகத் தோன்றுமோ என்னும் எண்ணத்துடன் கூறினான்.

இதைக்கேட்ட பத்மம் புன்முறுவல் பூத்த முகத்தோடு பேசத் தொடங்கி, "ஆம். தாங்கள் நிதானமாக ஏன் சொல்லவேண்டும்? தாங்கள் பெரிய குற்றம் செய்துவிட்டீர்கள். தங்களுடைய அடிமையைத் தாங்கள் அம்மணி என்றும் தாங்கள் நீங்கள் என்றும் அழைப்பது பெரிய குற்றமல்லவா? மற்றும் எதற்கும் உதவாததான எனது கரத்தைத் தங்களுடைய மதிபோன்ற முகத்தில் பதித்துக் கொள்வது அதைவிடப் பெரிய குற்றமன்றோ?" என்று குயில்போன்ற தனது குரலால் கூறினாள்.

இதைக்கேட்ட சுந்தரன் இன்ப வடிவமாக மாறிப்போய் பத்மாவின் பால்வடிந்த முகத்தைப் பார்த்து "ஆஹா! என்ன சமத்காரமாகவும் ஹாசியமாகவும் பேச்சு வருகின்றது! உங்களுடைய மனத்தில் எல்லாவற்றையும் முடிவு செய்துகொண்டு விட்டால் மேலே இருக்கும்வள்ளலின் எண்ணமும் அருளும் எத்தகையதாக உளதோ? எல்லாவற்றிற்கும் அவனது கருணை வேண்டாமா?

பத்மம்:—ஆஹா! அந்த வாஸுதேவனுடையகருணையில்லாமலா கப்பல் பார்க்கச்சென்றதும், அவனுடைய வாசஸ்தானமாகிய வாரிதியில் நான் விழ அவன் தானும் தன் தேவியும் சாக்ஷியாகவிருக்கத் தங்களை வருவித்து எனக்கு உயிர்ப் பிச்சையளிக்கச் செய்து புகழைத் தமக்குக் கொடுத்ததும், அதற்குப் பலனாக என்னையே தாம் கைப்

பற்றும்படியான பாவத்தோடு மார்போடணைத்துத் தூக்கி எடுத்து மருத்துவ உதவி செப்பவும் சமயமேற்பட்டது? பின்னும் தீயினால் வந்த விபத்து நீங்கும்படி தாம் செய்ததெல்லாம் அந்தக் காருண்ய மூர்த்தியாகிய கருணாகரனின் செயலன்றி வேறு முண்டோ? நம்முடைய தீர்மானமெல்லாம் அவர்கள் முன்னிலையிலேயே தீர்மானமானவைகளே யன்றி நாம் தீர்மானித்ததாக எண்ணவேண்டாம்" என்றாள்.

இதைக் கேட்ட சுந்தரன் பரமானந்தமடைந்து தனதிருகரங்களாலும் அவளுடைய புஜத்தை அன்போடு பிடித்து அணைத்தவாறு அங்குள்ள சோபாவில் அவளை உட்காரவைத்துத் தானும் பக்கத்தில் அமர்ந்து கனிந்த கதலியின் சுவைபோன்று பேசத்தொடங்கி, "என்னாருயிர்க் கண்மணி! என இனி வாய் கூசாமல் அழைக்கலாகுமா? இப்போது நான் குற்றமற்றவனாய் விட்டேனா?" என்று நகைத்தவாறு கேட்டுக்கொண்டே பத்மாவின் கரத்தைப் பிடித்து முத்தமிட்டான்.

பத்மவல்லி பூரித்த மனத்துடன் பேசத்தொடங்கி, "என் பிராணபதி! எல்லாம் சரிதான். தங்கள் தந்தை தேக அசௌக்கியமாக இருக்கின்றதாகவும் தங்களை வரும்படிக்குக் கடிதம் வந்ததாகவும் அப்பா தெரிவித்தார். தாங்கள் செல்லவேண்டியதென்னவோ முக்கியமான காரியம் தடுப்பதற்குமில்லை. தாங்கள் திரும்பி வருமளவும் இந்த உயிர் எவ்வாறு இருக்கும்? இந்தக் கவலையே எனக்கு மாலை முதல் போராடுகின்றது. இதைத் தம்மிடம் எவ்வாறு தெரிவிப்பதென்று நான் யோசித்துக்கொண்டே இருந்தேன். அதற்கும் கடவுள் கருணை கூர்ந்து தம்மை நித்திரையினின்றும் எழுந்திருக்கச் செய்யும்படியான பயங்கரமான கனவையுண்டுபண்ணித் தங்களை வரவழைத்து என் மனோபீஷ்டத்தைத் தெரிவிக்கும்படி செய்தார் பாருங்கள். ஆஹா! அவருடைய அருளை என்னென்று கூறுவது?" என்று கூறியவாறு சுந்தரனுடைய தோளின் மீது சாய்ந்தாள்.

சுந்தரன்:—என் கண்ணே! பத்மம்! எனக்கு என் தந்தையைப் பற்றிய கவலை அதிகமாக வருத்துகின்றது. அதனால் நான் நித்திரையே கொள்ளாமல் புரண்டுகொண்டே தானிருந்தேன். உன் கூக்குரலைக் கேட்ட வுடனே தாமதிக்கலாகாதென்று ஓடி வந்தேன்.

எனதன்பே! என் மனமும் உன்னைப் பிரிந்து செல்லவேண்டுமே என்று கலங்குகின்றது. என்ன செய்யலாம், எனதருமைத் தந்தையை நான் காணவேண்டுவது முக்கியமான காரியமல்லவா? இன்றே நான் செல்லாமலிருப்பது என் மனதிற்கு நிரம்பவும் வருத்தமாகவே இருக்கின்றது. உன் பிதாவின் வார்த்தையைத் தட்டமாட்டாமலும் உன்னை விட்டுச் செல்ல முடியாமலுமே தயங்கி நின்றுவிட்டேன். கண்மணி! நான் நாளைக் காலை ரயிலில் சென்று என் தந்தையின் தேக சுகம் எவ்வாறிருக்கின்ற தென்பதைப் பார்த்துக்கொண்டு தக்க மருந்து கொடுத்துக் குணப்படுத்திவிட்டு உடனே வந்து சேர்கிறேன். என் இன்பவடிவே! கலங்காதே'' என்று கூறிப் பத்மாவைத் தனது கரத்தால் அணைத்துக்கொண்டு முகத்தை நிமிர்த்திப் பளிங்குபோன்ற முகத்தில் பனித் துளிபோன்ற வேர்வையைத் தனது கைக்குட்டையால் துடைத்தான்.

பத்மத்தின் தந்தை மனக் கலக்கத்துடன் நித்திரையில் ஆழ்ந்தவர் அயர்ந்த நித்திரை வராமல் திடீரென்று கண் விழித்தவாறிருந்தார். அவர் தேக பாதையின் பொருட்டு எழுந்து குழாயினருகில் சென்று கால்சுத்தி செய்துகொண்டு வருகையில் பத்மாவின் அறையில் ஏதோ அரவம் கேட்பதுபோல் அவருக்குத் தோன்றிற்று. யார் இந்நேரத்தில் இங்குப் பேசுகிறார்கள் என்று எண்ணியவாறு மெல்ல நடந்துவந்து பத்மாவின் அறையின் ஜன்னலின் வழியாக மெல்ல எட்டிப் பார்த்தார். ஆஹா! சுந்தரன் பத்மாவை அணைத்துக்கொண்டு அன்பாகவும் உல்லாசமாகவும் பேசுவதையும் தன் புதல்வியும் சுந்தரனைத் தழுவியவாறு உள்ளார்ந்த பிரியத்துடனும் மகிழ்ந்து பூத்தமுகத்துடனும் உட்கார்ந்திருப்பதையும் கண்ட முதலியாரின் துயரமெல்லாம் பறந்துபோய் மனத்தில் ஆநந்தமும் சந்தோஷமும் பொங்கி எழுந்தன. "ஆஹா! எத்தனை ஆநந்தமாக இருக்கின்றது இக்காட்சி! இதைக் காணக்காண என் மனம் பரமாநந்தமடைந்து இன்ப ஊற்றுக் கிளம்புகின்றதே! ஐயோ! என் மனதிற்கு செல்லப்பாவினால் ஏற்பட்டிருக்கும் கஷ்டமில்லாமலிருந்தால் நான் நாளையே இத்தம்பதிக்கு விவாகத்தை முடித்து என் கண் குளிரப் பார்ப்பேனே! ஆஹா! கடவுள் என் பங்கிலிருந்து என் எண்ணத்தைப் பூர்த்தி செய்வித்து என் கண்மணிகளை மகிழ்விக்க

வேண்டும். அந்தநாள் சீக்கிரம் வருமோ? என் செல்லப்பா குற்றமற்றவன் என்று அவனுக்கு வந்திருக்கும் அபாண்டமான அவமானமும் நீங்கி என் மனமும் நிம்மதியடைந்து சுகப்படும் காலமும் வருமோ?'' என்று அங்குகாணும் ஆநந்த காட்சியைக்கண்டு களித்தவாறுநின்றார்.

உள்ளே சுந்தரன் கூறியதற்குப் பத்மவல்லி பேசத்தொடங்கி, "என் பிராணபதி! தாங்கள் தமது தந்தையைக் கவனிக்க வேண்டுவதையேமுக்கியமாகப் பார்க்கவேண்டும். அதுவே தமக்குப்பிரதானமானது. தங்கள் பிதா தேகசுகமடைந்த பின்னர் நேற்றுக் கூறிய என் பிதாவின் கோரிக்கையையும் தாங்கள் நிறைவேற்றி எனக்கும் தங்களுடைய தரிசனம்ருதத்தைத் தினம் அளித்துக்கொண்டே வரவேண்டுமாய் மறுமுறையும் மன்றாடி வந்தனம் செய்து வேண்டுகிறேன்'' என்று கூறிச் சரேலென எழுந்து சுந்தரனை வணங்கினாள். சுந்தரன் பத்மத்தைத் தூக்கி மார்போடு அணைத்துக்கொண்டு "என் கண்ணிலிருக்கும் கருமணியே! கரும்பின் கனிரசமே! எந்தக் காரியம் எவ்வாறு நடக்க வேண்டுமோ அதனை நடத்த என்னப்பன் பார்த்தஸாரதி தன் கருணைப்படி விதிக்கத் தயாராகவிருக்கிறான். அங்ஙனமே யாவும் நடக்கும். அதைப்பற்றிய கவலை நமக்கு எதற்கு? கண்மணி! உன்னுடைய பலஹீனமான நிலைமையில் நித்ரா பங்கம் செய்வது தேகசுகத்திற்குக் கெடுதலாகும். ஆதலால் நான் செல்கிறேன். நீ படுத்துக் கவலையற்று நித்திரை செய்வாய் கிளியே! மேலும் வீட்டில் யாரேனும் கண்விழித்து எழுந்து நம்மைப் பார்ப்பாராயின் என்ன நினைப்பார்களோ! என்னருமை பத்மம்! எனக்குத் திரவு அளிக்கின்றாயா? என் தங்கமே!'' என்று கேட்டவாறு பத்மாவின் முகத்தை நோக்கினான்.

ஆஹா! இங்கு இவ்விருவரும் பேசியதையும் பத்மா பணிந்ததையும் கண்ட முதலியாரின் மனம் இன்னும் கட்டுமீறிய ஆநந்தத்தையடைந்தது. சுந்தரனின் மேன்மையான குணத்தையும் வார்த்தையையும் கண்டு பூரித்து மெய்ம்மறந்தார். அவரையறியாமல் அவர் கண்களில் ஆநந்த பாஷ்பம் பெருகியது. அவருடைய உள்ளம் சுந்தரனைப் பலவிதத்தில் போற்றிவாழ்த்தியது. தமக்கு அச்சமயம் கிடைத்த காட்சியின் வைபவத்தையெண்ணி அவர் மகிழ்ந்தார். அவர் "நாமிங்கு நிற்பது இவர்களுக்குத் தெரிந்துவிடுமாயின்

இவர்களுடைய இன்பத்திற்குப் பங்கம் ஏற்பட்டுவிடுமே என் செய்வது? நாம் எதையும் அறியாதவன் போல நம்மறைக்குப் போய்விடுவோம். நாம் என்ன புண்ணியம் செய்தோமோ இந்த அற்புதகாட்சியைக் கண்டுகளித்தோம். இனியும் இவ்விடத்தில் நின்றால் இதை வேறு யாரேனும் கண்டால் உள்ளே என்னவோ விசேஷ மிருக்கின்றதென்று யூகித்துக் கொள்வார்கள். ஆகையால் நாம் சென்றுவிடுவதே சிறப்பு" என்று எண்ணி மகிழ்ந்தவராய் மீண்டும் அங்குள்ள காட்சியைப பார்த்துககொண்டே போய்விட்டார்.

பத்மம் :—நாதா! தாங்களிருப்பதனால் எனக்குண்டாயிருக்கும் இன்பமெல்லாம தாங்கள் சென்றதும் துன்பமாக மாறும். அப்போது அது தேகத்திற்கு மெத்த சுகமோ? தாங்கள் மருத்துவராயிற்றே! தமக்குத் தெரியாததா?

சுந்தரம் :—கண்ணே! பத்மம்! உன்னைவிட்டுச் செல்வதற்கு எனக்கு மட்டும் மனம் வரும் என எண்ணுகிறாயா? உன்னுடைய தேக சுகததை உத்தேசித்தும் காலம இரவென்பதை உத்தேசித்தும் தான் நான் செல்லவேண்டுமெனச் சொல்லுகிறேன். நம்முடைய ஜாதிக் கொள்கையாவது புஷ்பவதியாகிய பெண் மணம் முடியும் வரையில் ஆடவர்களைக் கண்ணெடுத்துப் பார்க்கக்கூடாதென்பதாம். நான் மருத்துவனகவந்தபடியாலும் ஒருவருக்கொருவர் பரஸ்பரம்ஏற் பட்டுள்ள ப்ரீதியினாலும் நாம் நீதிக்குவிரோதமாகப் பேசலானோம். நம்முடையவும் உன் பெற்றோருடையவும் மனத்திலிருக்கும் எண் ணத்தைப் பிறர் எங்ஙன மறியக்கூடும்? பணிமக்கள் ஒருகால் நம்மை இப்போது காண்பார்களாயின் அவர்கள்என்ன மதிப்பார்களோ! அவர் கள் நம்முடைய அந்தரங்கத்தை யறியாதவர்க ளல்லவா? நாமதை யோசிக்கவேண்டாமா? அதற்காகவே கூறினேன்.

பத்மவல்லி :—அன்பரே, தாங்கள் கூறியது முற்றும் சரியே. ஆனாலும் நாம் தவறுதலான காரியம எதுவும் செய்யவில்லையே! என் பாத்தாவிடம் நான பேசுவதில் தடைகூற வல்லோர் யாவர்? இங் குள்ள பணிமக்கள மிகவும் புத்திசாலிகள். அவர்களுக்கு விஷயத் தைத தாங்களே கிரகித்துக்கொளளும திறனுண்டு. இன்று காலை யில் பணிமக்களிற் பலர் உட்கார்ந்து 'இந்த டாக்டரய்யாவே நம் வீட்டுக்கு மருமகப்பிள்ளையாகச் சீக்கிரம் வரணும்ண்டா!" என்று

என் தந்தையின் கருத்தையறிந்தே பேசிக்கொண் டிருந்தார்கள் இதை நான் நேரில் கவனித்தது அவர்களுக்குத் தெரியாது. நாதா! உலகமே இப்போது புது நாகரிகத்தால் மூடப்பட்டிருக்கிறது. அத்தகைய உலகத்தில் கர்னாடகமாக விருக்கும் நம்மையும் இவ்விஷயத்தில் புது நாகரிகம் தன் வயப்படுத்தி விட்டதென்று எண்ணுவோமே! தாங்கள் மருத்துவரல்லாத அன்னியராக வந்திருப்பின் நாம் சந்திக்க சந்தர்ப்பம் கிடைக்கப்போகிறதா? தாங்கள் மருத்துவராகஉள்ளபடியால் எக்காலத்திலும் எவரும் தம்முடன்பேசுவது உலகசகஜமானதல்லவா? இதில் குறையொன்றுமில்லை பாருங்கள். ஆதலால் தான் தாங்களும் என்னுடைய வாய்க்குளரலைக் கேட்டுவந்தீர்கள்; பேசும் சந்தர்ப்பமும் கிட்டியது. இதைப்பற்றித் தாங்கள் வேறு விகற்பமாகவே எண்ணவேண்டாம். நாம் கடவுள் சாக்ஷியாகத் தம்பதியாவோம். நம்மை இப்போது இந்த இடத்திலேயே என் தந்தையோ, தாயோ காண்பார்களேயானால் ஆனந்த நிர்த்தனம் செய்வார்கள். அவர்களுள்ளத்தைத் தாங்கள் கொள்ளையடித்து விட்டீர்கள்.

சுந்தரன் :—(நகைத்துக்கொண்டே) பேஷ்! கண்மணி! என்னை மிகவும் தோத்தரிப்பதுபோலச் செய்து கடைசியில் என்னைத் திருடனுக்கி விட்டாயே! கள்ளனுடன் இரவுகாலத்தில் தனித்திருக்க உனக்குப் பயமாயில்லையா?

பத்மா :—ப்ராணபதே! கட்டாயம் தாங்கள் கள்ளர்தான். கள்ளனுடைய அம்சங்களில் அனேகம் தங்களிடத்தில் அமைந்திருக்கின்றன. அதாவது சாக்ஷாத் ஸ்ரீக்ருஷ்ணபகவான் பக்காத்திருட்டுப் பேர்வழி யல்லவா? தாமோதரனுகிய அந்தக் கிருஷ்ணபகவானைக் கண்ட ஏனையோரும் அவனடிமைபோ லாகிவிடுகின்றதாய்ப் புத்தக மூலமாக வாசித்துளேன். அதேபோலத் தம்முடைய முகார விந்தத்தைக் கண்ட எல்லோரும் தம்மிடத்தில் தாங்களாகவே பிரியங் கொண்டுஉம்முடைய அடிமைகளைப்போல ஆய்விடுகிறார்கள். இதற்கு நிதர்சனம் என் வீட்டாரே போதுமானது. மற்றும் அந்தக்கள்ளன் ஆச்சியர் வீட்டிலுள்ள வெண்ணெய்,தயிர்,பால் முதலியவைகளைக்களவாடினன். தாங்களோ, எங்கள் உள்ளமாகிய வீட்டையே கொள்ளையடித்துக்கொண்ட கள்ளனுய் விட்டீர்கள். அந்த தயாபரனே பக்தர்

களின் பிறவிப்பிணியை நீக்கி முக்தி யளிக்கின்றார். தாமோ மனிதர் களின் தேகப்பிணியை நீக்கிச் சுகமுண்டாக்குகிறீர்கள். இன்னும் இவைபோன்ற பல உள்ளன; அவற்றையெல்லாம் எடுத்துக் கூறுவ தென்றால் பொழுதும் விடிந்துவிடும். கள்ளனுக்கு அடிமையாக உள்ள எனக்குப் பயமொன்றுமேயில்லை.

சுந்தரன்:—என் ரத்தினமே! உன்னுடைய தேன்போன்ற மொழியைச் சிரவணாநந்தமாகக் கேட்டுக்கொண்டே இருப்பதை விட மேலான ஆநந்தம் வேறும் எனக்கு உண்டோ? அவ்வாறு இருப்பினும் உன்னுடைய தேகசுகத்தை உத்தேசித்தே நான் கூறு கிறேன். கண்மணி! நான் ஊருக்குச் சென்று வந்தவுடனே ஒரு தினம் சந்தித்துப் பேசுவோம். அதற்குள் உடம்பும் நன்றாகச் சுகம டைந்துவிடும். நீ படுத்துக்கொள். நீ நித்திரை செய்யும் வரையில் நானிங்கிருந்து பின்னர் செல்கிறேன். சயனித்துக் கொள்வாய் கண்ணே!'' என்று கூறியவாறு பத்மாவை ஒரு குழந்தையைப் போல் இரு கையினாலும் அலாக்காகத் தூக்கி அவளுடைய மஞ்சத் தில் விடுத்துத் தானும் பக்கத்திலுள்ள நாற்காலியி லமர்ந்தான்.

மஞ்சத்தில் சயனித்த பத்மம் நகைத்துக்கொண்டே "நாதா! நான் நித்திரை செய்வதுபோல் பாசாங்கு தான் செய்யவேண்டும். உண்மையான தூக்கம் வராது. அது கிடக்கட்டும். தாங்கள் ஊருக்குச் சென்று உடனே திரும்பி வந்துவிடுவீர்களா? சில தினங்கள் செல்லுமோ?'' என்றாள்.

சுந்தரன்:—நானிப்போது எவ்வாறு திட்டமாகக் கூறுவது? அங்குள்ள நிலைமை எவ்வாறிருக்கின்றதோ அதையறிந்த பின்னர் தான் தெரியும். என்றால் கூடியமட்டும் சீக்கிரமே வந்துவிடுகி றேன். அப்படிப் பயணம் தாமதமாயின் உன் பிதாவிற்குக் கடித மெழுதுகிறேன்.

பத்மம்:—ஆனால் எனக்குக் கடிதமில்லையா?

சுந்தரன்:—நீ பிரியப்படுவாயானால் கட்டாயம் எழுதுகிறேன். நான் உன்னிடம் ஒரு வஸ்து யாசிக்கின்றேன். அதைக் கொடுப் பாயா கண்மணி!

பத்மம்,—(எழுந்து நின்று) ஆ! நாதா! என்னிடம் தாங்கள் யாசிப்பதென்பதும் ஒன்றுண்டோ? என்னுடைய உயிரே உங்க

ளடிமையாகவிருக்க யாசிப்பது எதனை? எதை வேண்டுமானாலும் தாராளமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

சுந்தரன்:—பெண்மணீ! உன்னை விட்டுப் பிரிந்து அரை நிமிடமும் இருப்பதற்கு என் மனம் இடந்தரவில்லை. ஆகையால் உன்னைக் கூடவே அழைத்துச் செல்லப் போகிறேன். அதற்கு நீ உடன்பட்டு ஒரு கண்ணாடிப் படத்திற்குள் அமர்ந்து யாரும் அறியாதவாறு வரவேண்டும். எங்கே, அப்படிச் செய்வாயா?

பத்மம்:—ஆகா! எத்தனை பூடகமாகப் பேசுகிறீர்கள். உன்னுடைய புகைப்படம் வேண்டுமென ஒரே வார்த்தையாகக் கேட்கலாகாதா? அதைக் கேட்கவும் வேண்டுமோ? அதோ இருப்பவைகளெல்லாம் தம்முடையனவன்றோ? எது தேவையானாலும் எடுத்துக் கொள்ளலாகாதா?'' என்று கூறியவாறு அங்குச் சுவரில் மாட்டியிருந்த தன்னுடைய புகைப்படத்தில் ஒன்றைக் கொண்டுவந்து சுந்தரனிடம் கொடுத்தாள். சுந்தரன் ஆசையோடு அதை வாங்கிக் கொண்டு படத்தை உற்று நோக்கிப் பின் பத்மாவைப் பார்த்து, "கண்மணீ! இதை எனக்குக் கொடுத்ததற்காக உனக்கு நான் மரியாதை செய்வதா, அல்லது என்னோடு கூடவே வரப்போகும் இதற்குச் செய்வதா?'' என்று நகைத்தவாறு கேட்டான்.

இதைக் கேட்ட பத்மம் எப்போதும் புது வெள்ளம் வந்தால் பழய வெள்ளத்தை அடித்துக்கொண்டு போவது சகஜம் தானே. உலகமே அப்படித்தானே இருக்கிறது. அதுபோலத் தான் எல்லாம் நடக்கும்'' என்று பேசிக்கொண்டே வருகையில் சுந்தரன் இடைமறுத்து "ஆ! கோகிலமே! நான் உன்னை மறப்பேனா? ஒரு போதுமில்லை'' என்று கூறியபடியே பத்மாவை மார்போடு தழுவி அணைத்து இரு கன்னங்களிலும் முத்தமிட்டான்.

நாம் முன்னொரு அதிகாரத்தில் பத்மாவின் அறைக்குள் பயங்கரமான உருவம் ஒன்று சென்று கதவைத் தாளிட்டுக்கொண்டதாகத் தெரிவித்தது நமது நேயர்களுக்கு நினைவிருக்கலாம். அவ்வுருவம் மெல்ல ஓசை செய்யாமல் பத்மாவின் அறையில் பிரவேசித்துக் கதவைத் தாளிட்டுக் கொண்டதும் அங்கு சுற்றுமுற்றும் பார்த்தது.

அவ்வறை மிகவும் விசாலமான தாகையினாலும் அந்த அறையின் கதவிற்கும் கட்டிலிருக்கும் இடத்திற்கும் வெகுதூரமிருப்ப

தாலும் அந்த அறையில் விளக்கு அதிகமான பிரகாசமில்லாது மித மாக இருந்தமையாலும் அந்த அறையில் நுழைந்த உருவத்திற்குத் தூரத்திலிருந்த பத்மத்தையும் சுந்தரனையும் சீக்கிரம் தெரிந்து கொள்ள முடியாமலிருந்தது என்றாலும் மெல்ல நகத்தை யூன்றிக் கொண்டே சந்தடிசெய்யாமல் நடந்துவந்து அங்கு வைத்திருந்த பீரோவின் மறைவில் நின்று அங்குள்ளவற்றைக் கவனிக்கலாயிற்று. அப்போது தான் பத்மம் படத்தைக் கொடுத்ததையும் சுந்தரன் அவளை ஆலிங்கனம்செய்துகொண்டதையும் அங்கு ஒளிந்திருந்த அவ்வுருவம் கண்டது. அதற்கு அப்போதுண்டாகிய பொறாமைக்கு ஓராளவே இல்லை. அது பல்லைக்கடித்துக்கொண்டு ஆத்திரத்தோடு நிற்கிறது. சுந்தரன் ஆலிங்கனத்திலிருந்து பத்மத்தை விடுத்து "கண்மணீ! இதோ மணி எத்தனையாயிற்று பார்த்தாயா? பதினொன்றுக்கு மேலாய்விட்டதே! நானிங்கு வந்து ஒரு மணிகாலத்திற்குமேலாய் விட்டதே! அடடா! இனி நீ விழித்திருந்தால் கட்டாயம் தேக அசௌவுக்கியமே ஏற்படும். நீ படுத்துக்கொள். நான் சென்று வருகிறேன்" என்று கூறியவாறு அவ்விடத்தை விட்டு இரண்டடி எடுத்து வைத்தான். பத்மம் சுந்தரனின் கரத்தைப் பிடித்துகொண்டே "நாதா! தாங்கள் இனி ஊரிலிருந்து திரும்பிவருமளவும் தம்முடைய சேவை எவ்வாறு கிடைக்கும்? சீக்கிரமே வந்துவிடுங்கள் தாமதம் வேண்டாம்" என்று கூறியவாறு அவனுடனே சென்றாள். சுந்தரனும் அவ்வாறே வருவதாகக் கூறிப் பின்னும் நான்கு அடி எடுத்து அங்கு வந்த உருவம் ஒளிந்துக்கொண்டிருந்த பீரோவைத் தாண்டிச் சென்று கதவையடைந்தான்.

தான் உள்ளே வந்த காலத்தில் தாளிடாமல் வந்த கதவு தாளிடப் பெற்றிருந்ததைக் கண்ட சுந்தரன் திடுக்கிட்டு "இதென்ன பத்மம் நான் உள்ளே வந்தபோது கதவை வெறுமனே சாற்றிவைத்து வந்தேன். இப்போது தாளிடப்பட்டிருக்கின்றதே! யார் தாளிட்டிருப்பார்கள்? நீ இப்பக்கம் வந்தனையோ?" என்றான்.

இதைக்கேட்ட பத்மம், "நான் வரவில்லையே! தாங்களே ஒரு கால் தாளிட்டுக்கொண்டே வந்திருக்கலாம்; நினைத்துப்பாருங்கள்" என்றாள்,

**சுந்தரன்:-** இல்லை பத்மம்! நான் தாளிடவே இல்லை; எனக்கு நன்ருக நினைவிருக்கின்றது. நீ மின்சார விளக்குகளை யெல்லாம் ஏற்று. ஏதோ எனக்குச் சந்தேகமாக விருக்கின்றது"—என்ருன். உடனே பத்மம் அங்குள்ள விசையை அழுத்தினுள். விளக்குகள் பிரகாசிக்கலாயின. சுந்தரன் கதவைத் தாள் நீக்கிவிட்டு உள்முற்றும் சுற்றிப் பார்த்தான். எங்கும் எதுவும் காணப்படவில்லை. தான் வரும்போது கதவைத் தாளிடவில்லை என்ற நினைவு சுந்தரனுக்கு நன்ருக இருக்கின்றது. அவன் அங்குமுற்றும் நன்ருகப்பார்த்தும் எதுவும் தென்படாமையினுல் பத்மாவை நோக்கி, "பத்மம்! இது எனக்குப் பெரிய ஆச்சரியமாக இருக்கின்றது. நம்மிருவரைத்தவிர வேறு யாரோ இவ்வறையில் நுழைந்து தாளிட்டிருப்பது போலல்லவா தெரிகிறது. இதை நன்ருக ஆராய்ந்து பார்க்காமல் விடக்கூடாது. நீ என்ன சொல்கிருய்?" என்ருன்.

இதைக்கேட்ட பத்மம், "நான் என்னசொல்லப் போகிறேன்! தங்களுக்கு எப்படி உசிதமாகத் தோன்றுகின்றதோ அப்படிச் செய்யுங்கள். வெளியில் சென்று ஆட்களை அழைத்துவந்து பார்க்கலாமென்றும் தோன்றுகின்றது. நான் ஆட்களை அழைக்கின்றேன்" என்ருள்.

இதைக்கேட்ட சுந்தரன், "நீ சொல்வதும் சரிதான். ஆனுல் இப்போது கலவை செய்வது பிசகு. நானே இவ்வறை முழுதும் சுற்றிப் பார்த்துவிட்டு வருகிறேன். நீ மட்டும் பயப்படாமலிரு. அப்படி பயமாக விருந்தால் நீ வேண்டுமானுல் வெளியில் சென்று இரு; நான் பார்த்துவிட்டு வருகிறேன்." என்ருன். சுந்தரனைவிட்டு வெளிக்கிளம்ப மனமற்றவளான பத்மம், "தாங்களிருக்கும்போது எனக்குப் பயமொன்றுமில்லை; இருந்தாலும் தாம் தனித்துப் பார்ப்பதைவிட இரண்டு வேலையாட்கள் இருந்தால் நலம் எனத் தோன்றுகின்றது." என்ருள்.

இதைக்கேட்ட சுந்தரன், "நான் முதலில் பார்க்கிறேன்; ஏதேனும் சந்தேகம் உண்டாகும் பக்ஷத்தில் உடனே சொல்கிறேன்; அப்பொழுது வேலையாளை அழைத்துக்கொண்டு வா!" என்று கூறியவாறு அவ்வறைக்கதவைத் தாளிட்டு வைத்தபடியே அங்குள்ள மூலை முடுக்கு, பீரோ, நாற்காலி, சோபா, கட்டில் முதலியவற்றின் பின்

புறமும்,அடிப்புறமும்,மேல் புறமும் பார்த்தான். எங்கும் எவ்வித மான சந்தேகமும் காணப்படவில்லை, எல்லாவிடத்திலும் பார்த்து விட்டான். எங்கும் யாரையும் காணுமையால் சுந்தரன் பத்மாவை நோக்கி, "என்ன ஆச்சரியம்! எங்கும் சந்தேகிக்கக் கூடியதான எது வும் காணப்படவில்லையே! நாம் இருவரும் தாளிடாத கதவை யார் தாளிட்டிருப்பார்கள்?" என்று கூறிக்கொண்டே இருக்கும் சமயம் வெகு தூரத்திலிருந்து "சண்முகசுந்தரம்! சண்முகசுந்தரம்! என்று கூவும் குரல் இவன் காதிற்பட்டது. உடனே சுந்தரன் "பிரியே! இந்த நிசிவேளையில் யாரோ என்னை வீதியில் அழைப்பதுபோலக் குரல் கேட்கிறது; நான் வெளியில் செல்கிறேன். உனக்குப் பயமில் லாமலிருந்தால் இங்கு இரு. இல்லையேல் உன் தாயாரறையில் சென்று படுத்துக்கொள். அழைப்பது யார் என்று பார்த்து வருகி றேன். மேலும் வேலைக்காரன் நான் இங்கிருப்பதை அறியா முன் னம் செல்கிறேன். இனி நான் ஊருக்குச்சென்று வந்த பிறகுதான் உன்னைக் காணமுடியும்" என்று கூறியவாறு அவ்விடத்தை விட்டு வெளியில் சென்று தான் படுத்திருந்த அறைக்குச்சென்று, அங்கி ருந்து வருபவன்போல் அந்தக் கதவைத் திறந்துகொண்டு வாசற்படி யைத் தாண்டுவதற்குள் தன்னறையை நோக்கி ஒரு வேலைக்காரன் விரைக்க விரைக்க ஓடிவருவதைக்கண்ட சுந்தரன் திடுக்கிட்டு நின்றான். வந்த வேலைக்காரன் சுந்தரனைப் பார்த்து, "ஐயா! தங்களுக்குத் தந்தி வந்திருக்கிறதாம். சேவகன் தங்களை அழைக் கின்றான்" என்றான். இதைக்கேட்ட சுந்தரன் குடல் நடுங்கிற்று. "ஐயோ! என்ன தந்தியோ தெரியவில்லையே!" என்று பதறப் பதற ஒரே ஓட்டமாக வீதியை அடைந்து கேட்டைத் திறந்து தந் தியை வாங்கி, உடனே பிரித்துப் படிக்கலானான். அது பின் வரு மாறு இருந்தது.

"சுந்தரன்! உன் தந்தைக்கு ஜுரம் அதிகமாக இருக்கின்றது. உடனே உன் வைத்தியரை அழைத்துக்கொண்டு வந்துசேரவும்."

உமாமஹேஸ்வரியம்மாள்—(தாயார்)

இதைப்படித்ததும் சுந்தரனுடைய கண்களில் நீர் அருவியைப் போல் பெருகியது. அவன் மனம் கலங்கித் துடித்தது. "ஐயோ! இந்த அர்த்த நிசி வேளையில் அவசரத் தந்தி வந்திருப்பதை நோக்

க்த் தந்தை எவ்வாறிருக்கிறரோ! ஐயோ! முட்டாள்தனமாக நான் இன்றே போகாமலிருந்துவிட்டேனே! என்ன செய்வேன்?" என்று அலேந்துகொண்டே தந்தியை எடுத்துக்கொண்டு நேரே முதலியார் அறைக்கு வந்தான்.

முதலியார் அப்போதே சற்றுக் கண்ணயர்ந்தபடியால் அவருக்குச் சுந்தரன் வந்தது தெரியாமல் போய்விட்டது. என்றாலும், சுந்தரன் வெகு விசனத்தோடும் மரியாதையாகவும், "பெரியீர்! பெரியீர்!" என்று இருமுறை அழைத்தான். உடனே முதலியார் எழுந்து சுந்தரனை நோக்கி என்னவென வினவினர். இதற்குள் சுந்தரன், "தம்மை நித்திரையில் எழுப்பிவிட்டேன். மன்னிக்கவேண்டும். இதோ இதைப் பாருங்கள்" என்று கூறித் தந்தியைக் கொடுத்தான். முதலியார் தந்தியைப் பார்த்ததும் விசனத்துடன், "ஐயோ! இன்று காலையிலேயே போகவேண்டிய நீ, பாபி என்னாலல்லவா நின்றுவிட்டாய். என்ன செய்வேன்? அப்பா! இப்போது உனக்கு வண்டி ஏது? எப்படிச் செல்வாய்? நம்முடைய வண்டியிலேயே சென்று வருகிறயா?" என்றார். இதைக் கேட்ட சுந்தரன் "தங்களிஷ்டம் எப்படியோ அப்படியே செய்யவும்" என்றான்.

இதற்குள் தனியாக விடப்பட்ட பத்மம், தந்தி என்னும் செய்தியைக் கேட்டதும் மனந்துடித்தாள். அவள் தேகம் அந்த அறையில் இருக்கை கொள்ளாமல் தவிக்கின்றது. அவள் மெல்லத் தன் அறைக்கதவைத் திறந்துகொண்டு வெளியில் வருவதற்கு வாசற்படியண்டை வந்தாள். அப்போது திடீரென்று அவள் வாயில் ஒரு துணிப்பந்து அடைக்கப்பட்டது. உடனே அவள் கூச்சலிடமாட்டாமல் துடித்து விழுந்துவிட்டாள். அடுத்த க்ஷணத்தில் பத்மத்தை ஓர் பெரிய கோணியில் அடைத்து மூட்டையாகக் கட்டியாய்விட்டது. உடனே அம்மூட்டை அங்குப் பதுங்கியிருந்த உருவத்தின் தலைமீதும் ஏறிவிட்டது.

முதலியார் சுந்தரனுக்குத் தேறுதல் கூறியவாறு தமது ஆளையனுப்பி வண்டியைத் தயார் செய்யும்படிக்கு உத்தரவிட்டார். உத்தர க்ஷணத்தில் வண்டியும் வந்துவிட்டது. சுந்தரன் முதலியாருடன் சொல்லிக்கொண்டு, "தங்கள் புதல்வியுடனும் சொல்லிவிட

வேண்டும்" என்று கூறியவாறு வண்டியில் ஏறினான். முதலியார் சுந்தரனை வண்டியில் ஏற்றிவிட்டு ஒரு சிறிய பையைச் சுந்தரன் ஜேபியில் வைத்துவிட்டு, "அப்பா சுந்தரம்! இதை நீ மறக்காதே. ஊருக்குச் சென்றதும் உன் தந்தையின் நிலைமையைப்பற்றிச்சுருக்கமாகத் தந்தியடி. சற்று நிதானமாக விருந்தால் இந்த வண்டியிலேயே ஏற்றி அவரை இங்கேயே அழைத்துக்கொண்டு வந்துவிடு. நான் நேற்றுக் கூறியதுபோல் இந்த வீடு உன்னுடையதெனவே பாவித்துக்கொள். நான் இப்போது இருக்கும் நிலைமையில் உன்னுடன்கூட வருவதற்கு இல்லாமலிருக்கிறேன். அதைப்பற்றி வித்திபாசமாக எண்ணாதே. டாக்டரை அழைத்துச் செல்" என்று கூறிக் கூட ஓர் ஆளையும் துணைக்கனுப்பிவிட்டு வண்டியைவிடச் செய்தார். உடனே வண்டியும் வைத்தியர் வீட்டை நோக்கிச் செல்லவாரம்பித்தது. அடுத்த நிமிஷம் வண்டி வைத்தியர் வீட்டையடைந்தது. சுந்தரன் வைத்தியரை எழுப்பித் தந்தியைக் காட்டித் தம்முடன் வரவேண்டுமென்று அழைக்க, அவர், "நான் முக்கியமான பெரிய அபாயகரமான கேஸில் தலையிட்டிருப்பதால் வருவதற்குச் சாத்தியமில்லை. தக்க ஔஷதத்தை எடுத்துச் சென்று, கொடுத்துப் பார்த்து அவரையே இங்கு அழைத்து வந்துவிடு" என்று கூறி மருந்துகளை எடுத்துக்கொடுத்தார். உடனே சுந்தரன் அவைகளை வாங்கிக்கொண்டு கண்ணீர் பெருக வண்டியில் ஏறித தன்னூரை நோக்கிச் செல்லலானான்.

சுந்தரனை வண்டியிலேற்றி யனுப்பிய முதலியார் பத்மவல்லியின் அறைபண்டை வந்துபார்க்கக்கதவு தாளிடப்பெற்றிருப்பதைக்கண்டு அவள் அயர்ந்து நித்திரை செய்வதாக எண்ணித்தாமும் சென்று தன்னறையில் படுத்துக்கொண்டார். முதலியாருக்கு நித்திரையே வரவில்லை. அவர் பத்திரிகையை யேனும் படித்துக்கொண்டிருப்போமென எண்ணி அன்று மாலைவந்த பத்திரிகையை எடுத்துப் படிக்கலானார். அதில் ஒருபக்கத்தில தடிதத எழுத்தில் பின்வருமாறு எழுதியிருந்தது.—

## கொலை! கொலை!!

### அடையாற்றில் படுகொலை

"அடையாற்றில் பிரபலவககீலாயும் சென்னை கவுன்சில் மெம்பராயுமிருக்கும் நடராஜ முதலியாரின் ஏகபுத்திரியாகிய காந்தாமணி

என்னும் பெண்மணியை நேற்றிரவு, முல்லையூர் இளைய ஜமீந்தாராகிய செல்லப்பா வென்பவர் கொலை செய்து விட்டாராம். இறந்துபோன பெண்ணின் மீது அவர் காதல் கொண்டிருந்தாராம். அவர் தாசி நீலாமணியின் வீட்டில் களவாடிச் சிறையிலிருந்த காலத்தில் அந்தக் காந்தாமணியை உதவிக்கு அழைத்துக் கடிதம் எழுதியிருந்தாராம். அதற்கு அவள் உதவிபுரிய மறுத்துவிட்டாளாம். அந்தப்பகைமையினால் நேற்றிரவு அவர் மாறுவேடத்துடன் சென்று அவளைக் கொலை செய்துவிட்டாராம். அவரைப் போலீஸார் சிறையில் வைத்திருக்கிறார்கள். போலீஸார் சாமர்த்தியமாகத் தக்க சாக்ஷியங்களையும் கண்டுபிடித்திருக்கிறார்கள். வழக்கு சைதாப் பேட்டை கோர்ட்டில் நடைபெறும்''—என்று எழுதியிருந்த விஷயங்களில் சில வரிகள் படிக்கும்போதே அவர் உயிர் துடிக்க வாரம்பித்தது. அவர் மீண்டுமுள்ள விஷயங்களைப்படித்துச் செய்தியை அறிந்ததும் ''ஐயோ!'' என்ற பெரிய கூச்சலிட்டவாறு நிலத்தில் சாய்ந்துவிட்டார்.

---

## 11-வது அதிகாரம்

### மதியிழந்த வானம்—கதிகலங்கும் சம்பவம்

நமது துப்பறியும் நாயுடு இரவு போஜனத்தை முடித்துக் கொண்டு படுத்தாரே யொழிய அவருக்கு நித்திரையென்பதே சற்றும் வரவில்லை. அவர் எண்ணமுற்றும் இந்த வழக்கின் மேலேயே சென்று பலவிதமான யோசனையில் சிதறுண்டு கிடக்கின்றது. அவர் ''காந்தாமணியின் வண்டியோட்டியைக்கண்டு அவளுடைய சிநேகிதர்களின் விலாசங்களைத் தெரிந்துகொண்ட பிறகு தான் நம்முடைய சந்தேகத்தை நிவர்த்தி செய்துகொள்ள வேண்டும். நாம் வண்டியோட்டியை எவ்வாறு கண்டு விலாசத்தைக் கூறும்படிக் கேட்பது?'' என்று யோசித்தவாறே அன்றிரவைக் கழித்தார். குமாஸ்தாவும் சற்றும் நித்திரையின்றிக் கலங்கியவாறு இரவைக் கழித்தார்.

சூரிய உதயம் ஆயிற்று. நாயுடுவும் குமாஸ்தாவும் எழுந்தார்கள். நாயுடு குமாஸ்தாவை நோக்கி, ''ஐயா! நான் முதலில் சென்று அந்தப் பெண்மணியின் சிநேகிதர்களைத் தெரிந்துகொண்டு வருகி

றேன். இப்போதும் நீர் அங்கு செல்லாவிட்டால் நன்ருயிராது. நேற்று நீர் ஒருகாரியம் செய்திருக்க வேண்டும். அதாவது எந்த விஷயமும் பத்திரிகையில் வராமலிருப்பதில்லை. அவர்கள் நேற்றே ஒருகால் பத்திரிகையில் பார்த்திருந்தால் என்ன செய்கிருர்களோ தெரியவில்லை. எனக்குஅதுதான் பெரிய கவலையாயிருக்கிறது. ஆகையால் நீர் உடனே அங்குள்ள நிலைமையைக் கவனியும். நேற்று நமக்கிருந்த குழப்பத்தில் இந்த நினைவே இல்லை. நான் சென்று திரும்ப எவ்வளவுநேரம் பிடிக்குமோ? நீர் உடனே செல்லும்" என்ருர். இதைக்கேட்ட குமாஸ்தா, "ஐயோ! நான் பத்திரிகையை அவர்கள் கைக்கு அகப்படாமல் செய்துவராமல் போய்விட்டேனே. சரி. இனிக் கடந்ததை எண்ணிப் பயன் என்ன? நான் செல்கிறேன். நீங்கள் எவ்வாறேனும் இந்த வழக்கின் உண்மையைக் கண்டுபிடிக்கவேண்டும்" என்று சொல்லிவிட்டு அவ்விடத்தை விட்டுச் சென்ருர்.

பிறகு நாயுடு ஒரு தனவந்தன் வீட்டு பில்லைச் சேவகன்போல வேஷமணிந்துகொண்டு பச்சை கூறிய அடையாளமுள்ள வீட்டை நோக்கி ஓர் ஜட்கா வைத்துக்கொண்டு போய்ச் சேர்ந்தார். அங்கு வண்டியோட்டி நடைத்திண்ணையில் உட்கார்ந்திருந்தான். அவன் இவரைக் கண்டு யாரென்று விசாரித்தான். நாயுடு மிகவும் விசனம் கொண்டவர்போலப் பேசினுர். காந்தாமணியின் தந்தை பிரபல வக்கீல், கவுன்சில் மெம்பர் என்பதை நாயுடு அறிவாராகையாலும், கோபால செட்டி என்பவருக்கும் வக்கீலுக்கும் சற்றுப் பழக்கமுண்டு என்பதை முன்னரே தாமறிவாராகையாலும், தாம் கோபால செட்டியாரனுப்பி வந்ததாகவே கூறவேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டு வண்டியோட்டியை நோக்கி, "ஐயோ! தங்களுடைய எஜமானுக்கு வந்துள்ள கஷ்டங்களை எண்ண மனம் துடிக்கின்றது. செட்டியார் வீட்டில் பிரஸ்துதம் வந்திருக்கிறது. அதற்கு உங்கள் எஜமானரின் நண்பர்களுடையவும், அன்னவரின் குமாரத்தியின் சிநேகிதை, சிநேகிதர் முதலியவர்களினுடையவும் விலாசங்கள் சில மாறியிருக்கின்றனவாம்; சில நினைவிலில்லையாம்; தாம் இச்சமயம் முதலியாரைக் கேட்பது சரியில்லை என்று எண்ணித் தம்மை விசாரித்துத் தெரிந்துகொண்டு வரும்படியாக என்னை அனுப்

பினர்கள். நான் அவர்கள் வீட்டிற்குப் புதியவனுகையால் தங்களுக்கும் புதியவனுகத் தோன்றலாம். விவாகத்திற்கு அவர்களுக்கெல்லாம் பத்திரிகை யனுப்ப வேண்டுமாம். சற்று விலாசத்தை ஒரு காகிதத்தில் எழுதித் தரவேண்டும்; நேரமாய்விட்டது" என்றூர்.

இதைக் கேட்ட வண்டியோட்டி முன்னிருந்து மிகவும் விசனப்பட்டுக் கொண்டிருந்தானுகையால், எதுவும் அதிகமாகப் பேசவில்லை. மேலும் அவன் செட்டியார் வீட்டிற்கு அதிகமாகச் சென்றதுமில்லை. எஜமானன் வண்டியோட்டி வேறுகையினல் இவன் செட்டியார் வீட்டுச் செய்தி எதுவும் அதிகமாக அறிந்தவனன்று. அவன் பதில் எதுவும் பேசாமல், ஒரு காகிதத்தில் தன்னுடைய எஜமானியின் நண்பர்களின் பெயரும், விலாசமும் எழுதிக் கொடுத்து, "எஜமானரின் நண்பர்களின் விலாசம் எனக்கு முற்றும் தெரியவராது. அவர் வண்டியோட்டி வேறு. ஏதோ தெரிந்த சிலவற்றை எழுதி இருக்கிறேன். வண்டியோட்டு கிறவனை விசாரித்துத் தெரிந்துகொள்ளும்" என்று கூறி முதலியாரின் வண்டியோட்டியின் விலாசத்தையும் பெயரையும் தெரிவித்தான். நாயுடு அதை வாங்கிக்கொண்டு உள்ளுக்குள் சந்தோஷம் பொங்க அவனிடம் சொல்லிக்கொண்டு அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டுப் போய்விட்டார்.

அவர் தாம் முன்னல் ஏறிவந்த வண்டியிலேயே அமர்ந்து தம் வீட்டை நோக்கி வண்டியைச் செலுத்தலானுர். வண்டியோட்டி கொடுத்த விலாசத்தை நன்றாகப் படித்துக்கொண்டு வீதி முதலிய அடையாளங்களைத் தெரிந்துகொண்டார். நேரே தம் வீடு சென்று போஜனம் முதலியவற்றை முடித்துக்கொண்டார். தாம் சைதாப் பேட்டைக்குச் சென்று முதலியாரைப் பார்ப்பதற்குள் ஏதாவது உறுதிமொழி யொன்று உரைக்கும்படியான உண்மையைக் கண்டு பிடித்துப் பின்னரே செல்லவேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டார். இனித் தாம் தாமதிக்காமல் இந்த வழக்கின் உண்மையைக் கண்டு பிடிக்கவேண்டும் என்று எண்ணியவராய்த் தம தறையில் ஒரு நாற்காலியில் உட்கார்ந்தார். அவர் ஏதோ ஆழ்ந்த யோசனையிலமர்ந்திருக்கிறுர். அச்சமயம் அங்கு மேஜைமீதிருந்த டெலிபோன் மணியடித்தது. உடனே நாயுடுகாரு எழுந்து

மேஜையருகில் சென்று டெலிபோன் யார் செய்ததென்று விசாரிக்க லானர். "எங்கிருந்து பேசுகிறீர்கள்? யார் பேசுவது?..........குமாஸ்தாவா? சைதாப்பேட்டையிலிருந்தா?........என்ன! என்ன!!! அர்ஜெண்டா? உடனே வரவேண்டுமோ! இதோ வருகிறேன்....என்று கூறி டெலிபோனை வைத்துவிட்டுத் தமது மோட்டாரைப் போட்டுக் கொண்டு உடனே சைதாப்பேட்டையை நோக்கிச் சென்றார்.

அப்போது அவர் மனத்தில் சொல்லவறியாத எண்ணங்கள் சிதறுண்டு கிடந்தன. அவர் வண்டியை வாயுவேக மனோவேகமாக ஓட்டிக்கொண்டு சைதாப்பேட்டையை அடைந்தார். அங்கு ஒரே அமர்க்களமும் கூக்குரலுமாகவே இருந்தன. வீதிப்பக்கமும் உட்பக்கமும் ஜனங்கள் நிறைந்திருந்தார்கள். நாயுடுகாரு இதைக் கண்டதும் "ஐயோ! இங்கென்னவோ விபரீதம் நடந்துவிட்டாற்போ லிருக்கிறது. ஒருகால் செல்லப்பாவின் செய்தியை முதலியார் அறிந்துகொண்டதனால் ஏதேனும் விபரீதம் நேர்ந்துவிட்டதோ!" என்று எண்ணியவாறு வண்டியைவிட்டுக் கீழே இறங்கினார்.

வண்டி வந்த செய்தியை அறிந்த குமாஸ்தா எழுந்து ஓடி வந்து "ஐயோ! இதென்ன விபரீதம்! இந்த அநியாயம் எங்கு நடக்கும்! நம்முடைய சமஸ்தானத்திற்கும் இத்தகைய காலம் வந்துவிடுமோ?" என்று கூறியவாறு நாயுடுவை உள்ளே அழைத்துச் சென்றார். நாயுடு "என்ன செய்தி? என்ன நடந்தது?" என்று ஆத்திரத்தோடு கேட்டார். இதைக்கேட்ட குமாஸ்தா, "ஐயோ! நடந்திருக்கும் கொடுமையை என்னென்று கூறுவேன்? இதோ இந்தக் கடிதத்தைப் பாருங்கள்" என்று கூறி ஒரு கடிதத்தை நாயுடுவின் கையில் கொடுத்தார். நாயுடு அதை வாங்கிப் படிக்கலானார். அதில் பின்வருமாறு இருந்தது;—

"ஐயோ! நானிந்தப்பூவுலகில் துயரப்படுவதற் கென்றே தான் பிறந்தேன். ஆ! என்னுயிர் நிலையாகிய என் செல்லப்பாவின் விதியைப் பத்திரிகையில் கண்டு கலங்கும் படியான பாபம் செய்ததே போதுமானது. என்னருமைச் செல்லப்பாவின் உயிரை மடிக்கும் பொருட்டு அவன் தலையில் ஒன்றன்பின் னொன்றாக ஆபத்துக்களை எந்தப் புண்ணியாத்துமாக்கள் விளைவிக்கின்றார்களோ அறியேன். என் கண்மணியின் உயிரைத் தூக்குமரத்தில் மாய்ப்பதற்குள் என்னுயிரை நானே மாய்த்

துக்கோள்கிறேன். என்னைப்பற்றியாருக்கும் கவலைவேண்டாம்;தேடவும் வேண்டாம். மச்சம் தின்னுமலிருக்குமாயின் என் சவம் ஒருகால் கண் ணில் படலாம்;இல்லையேல் அதுவுமில்லை. எனதருமை பத்மவல்லியை எனதாருயிர் சுந்தரனுக்கு மணம் செய்வித்து விடுங்கள். இது என்னு டைய கோரிக்கை. இந்தக் கடிதம் கிடைப்பதற்குள் என்னுயிர் நிம்மதி யாகவிருக்கும். லக்ஷ்மியி னுயிரும் நில்லாதென்று நினைக்கிறேன். சுந்தரன் தனது தந்தையை அழைத்துக்கொண்டு வந்தாலும் வருவார். அவரை நன்ருக உபசரித்துப் பத்மத்தைப்பார்த்துக் கொள்ளச் சொல்ல வும். இக்கடிதத்தைக் காட்டவும். நல்லபுத்திசாலியாகிய என்பத்மத்தை யும் விட்டுப் பிரிந்தேன்; என் செல்லப்பாவையும் இழந்தேன், லக்ஷ்மி யையும் துறந்தேன்; எனது சகோதரனைப்போல் பழகிய குமாஸ்தாவை யும் கைவிட்டேன்; பணிமக்களையும் மறந்தேன். என்னுயிரை ஜலத் திற்கு அர்ப்பணம் செய்யச் சித்தமாய் விட்டேன். ஒருகால் நமது துப்பறி யும் நிபுணரால் செல்லப்பா தப்புவானே யானுல் முன்போலல்லாமல் நற்புத்தியுட னிருக்கும்படிக்கு எல்லோரும் கூறவும். என் கண்மணி பத்மவல்லியை என் பிரிய சுந்தரனுக்கு மணம் செய்வித்து என்கண் ணூரக் கண்டுகளிக்கும் பாக்கியத்தைச் செய்யாத சண்டாளப்பாவியான் உயிர் துறக்கின்றேன். என் செல்லப்பாவிற்கு வந்துள்ள அவமானத்தை என்னுல் கண்டு சகிக்கக் கூடவில்லை. என்னைப்பற்றிக் கவலைவேண் டாம்.

இங்ஙனம்,
கேசவ முதலியார்

என்று வரையப்பட்டிருந்த கடிதத்தைப் படித்த நாயுடுகாரு "ஆ! இதென்ன விபரீதம்! நான் காலையில் நினைத்தவாறே ஆய்விட்டதே. ஐயோ! என்ன செய்வது!" என்று கலங்கினுர்.

இதற்குள் குமாஸ்தா "ஐயோ! இதோடு விட்டதாகவா எண்ணி விட்டீர்கள்? இன்னும் பெரிய பாறையே தலைக்கு வந்திருக்கின்றதே! ஐயையோ! எனக்கு ஒன்றுமே தெரியவில்லை! இந்த அநியாயக்கொள் ளைக்கு என்ன செய்வோம்? நான் காலையில் வந்தபோது இன்னும் எஜமான் எழுந்திருக்கவில்லை என்று வேலைக்காரன் கூறினுன். தினம் இருள்பிரிவதன் முன்னம் எழுந்திருப்பவர் இன்று இன்னும் நித்திரை செய்கிருர் என்றதும் எனக்குச் சந்தேகம் உண்டாயிற்று. உடனே

நான்எஜமானரறைக்கு வந்து பார்த்தேன். கதவை வெறுமனேசாத்தியிருந்தது. அதைத்திறந்துகொண்டு நான் உள்ளேசென்றேன். கட்டிலின்மீது எஜமான் படுத்திருந்தார். சரி நல்லதூக்கமோ என்னவோ என்று நான் உடனே எழுப்பாமல் வந்துவிட்டேன். பிறகு அரைமணி கழித்து மீண்டும் எனக்குச் சந்தேகமாவே இருந்தது. அப்போது முதலியாருக்கு வேண்டியவன் ஒருவன் ஒரு கடிதத்தைக் கொண்டுவந்து கொடுத்தான். அதை வாங்கிக் கொண்டுபோய் எஜமானர் அறைக்குச் சென்று மேஜைமீது வைத்தேன். அங்கு இந்தக் கடிதம் மடித்துவைத் திருந்தது, இதை என்னவென்று எடுத்துப் பார்த்ததும் என்னை மீறி நான் கூச்சலிட்டு அலறிவிட்டேன். தாங்கவியலாத துயரத்தினால் மூர்ச்சையாகியும் விழுந்துவிட்டேன். என் கூக்குரலைக் கேட்டு எல்லோரும் அலறி யடித்துக்கொண்டு ஓடிவந்தார்களாம். பிறகு என்னை மூர்ச்சை தெளியச் செய்தார்களாம். நான் மூர்ச்சை தெளிந்தெழுந்ததும் கட்டிலில் போய்ப் பார்த்தேன். தலையணையை வைத்து அதன்மேல் துப்பட்டியால் போர்த்து மூடியிருப்பதைக் கண்டு அதை எடுத்துவிட்டு இக்கடிதத்தை எல்லோருக்கும் படித்துக் காட்டினேன். அந்தோ! அதைக் கேட்டதும் எல்லோரும் நெருப்பின்மீது புழுவெனத் துடித்தார்கள். இந்த அமர்க்களத்தை யறிந்த அக்கம்பக்கமுள்ள ஜனங்களும் கும்பல் கூடிவிட்டார்கள். இத்தனை அமர்க்களத்திலும் பத்மவல்லியைக் காணாமையால் எனக்குச் சந்தேகம் உண்டாகி அந்தம்மாளின் அறைக்கு ஓடினேன். அங்கு கதவு உட்புறம் தாளிடப் பெற்றிருந்தது கண்டு ஒருகால் தூங்குகிறார்களோ என எண்ணினேன். என்றாலும் இத்தனை கூக்குரலில் அவர்கள் எப்படித் தூங்குவார்கள் என்றும் தோன்றிற்று. கதவைத் தடதடவென்று இடித்தேன். எவ்விதத்தகவலும் கிடைக்கவில்லை. எனக்குப் பின்னும் பெரிய சந்தேகமுண்டாய் விட்டது. எங்கள் எஜமானியம்மாள் அப்படியே மூர்ச்சித்து விட்டவர்கள் தெளியவே இல்லை. நான் கதவை இடித்தேன். ஜன்னல்களை எல்லாம் இடித்தேன். எதற்கும் ஒன்றும் தகவலே இல்லை. இதற்குள் இங்குக் கூடிய கூட்டத்தின் கலபையில் போலீஸ்காரரும் வந்துவிட்டார்கள். அவர்கள் வந்த வுடனே கதவை உடைத்து உள்ளே பிரவேசித்தார்கள்,

உள்ளே எங்கு தேடியும் ஒருவரையும் காணுமையோடு பத்ம வல்லியையும் காணேம் என்பதை அறிந்த என்னுயிர் பறந்தது. எனக்கு ஒன்றுமே தோன்றவில்லே. நான் பிரமை பிடித்தவன் போல் அலற்றுகிறேன்; சுற்றுகிறேன். அந்த அறையின் கத வைத் தாளிட்டுக்கொண்டு யார் எப்படி மாயமாக மறைந்து போயிருப்பார்கள். தாளிட்ட கதவைத் திறக்காமல் எவர் தான் எவ்விதம் மறையக்கூடும் என்று என் மனம் பதறியது. உடனே உங்களுக்கு டெலிபோன் செய்தேன். தாங்கள் வீட்டி லில்லே என்று தெரியவந்தது. பிறகு நானும் போலீஸாரும் எவ் விதத்தில் ஆராய்ந்தும் வழியே ஏற்படவில்லே. அதற்குள் எஜ மானியம்மாளுக்கு மூர்ச்சை தெளியவைத்தார்கள். உடனே இந் தக் கோரமான செய்தியைக் கேட்டு இன்னும் துடித்தார்கள். அந்தம்மாள் இவ்வறையில் வந்து பார்த்து, இங்கு ரகஸிய அறை யொன்று இருக்கின்றது. அதைப் பாருங்கள் என்று கூறி வழி காட்டினுர்கள். போலீஸாரும் நானும் அந்தம்மாள் மட்டும் அவ் வழியே சென்று அந்த ரகஸிய அறையைக் கண்டுபிடித்தோம். அங்கு ஒரு மனிதரையும் காணவில்லே. அந்த அறையிலிருந்து வெளியில் செல்லக்கூடிய வழிக்கதவு இருந்தது. அதுமட்டும் திறந் திருந்தது. அந்த அறையில் ஒரு மூலேயில் பெரிய கோணி மூட்டை ஒன்று இருந்தது. எங்கள் எஜமானியம்மாள் அந்த மூட் டைக் கண்டதும் இந்த மூட்டை இங்கு நாம் வைத்ததன்று. இது யார் வைத்திருக்கிறுர்கள்? இதில் என்ன இருக்கிறது பாருங் கள்" என்று கூறினுர்கள். நாங்கள் அதைப் புரட்டினேம். அந்த மூட்டை தளர்ந்தது. போலீசார் அதை அவிழ்த்தார்கள். அந்தோ! என்ன செய்வேன்? அதில் ஒரு பெண்மணியின் பிரேதம் அடைத் திருந்தது கண்டு எல்லோரும் திடுக்கிட்டுத் துடிதுடித்தோம். உடனே போலீஸார் அந்த மூட்டைக்குள்ளிருந்த பிரேதத்தை வெளியிலெடுத்தார்கள். அதில் துர்க்கந்தமாக வாடை வீசிற்று. அதன் முகம் அழுகிவிட்டதுபோல் கோரமாய்த் தண்ணீர் வழி கின்றது. தேகத்திலும் அனேக விடங்களில் காயங்கள் பட்டு ரத்த மும் சீயும் தோய்ந்து நாற்றமெடுத்திருந்தது. அந்தச் சவத்தை அவ்வறையை விட்டு வெளியில் கொண்டுவந்து கிடத்திப் போலீ

சார் சவத்தைச் சோதனை செய்து பார்த்ததில் அந்தச் சவத்தின் இடையில் கட்டியிருந்த முந்தானையில் சரிகை ஜிகினாவினால் காந்தா மணி என்ற எழுத்துக்களைத் தைத்திருந்தது. விரலில் அணிந்திருந்த மோதிரத்திலும் அவளுடைய இனிஷயல் செதுக்கப்பட்டிருந்தது. அந்தோ! பரிதாபமே! அந்தச் சவத்தைக் கண்ட போலீஸார் "இந்தப் பெண்மணிதான் காணாமல் போனவளா?" என்று கேட்டார்கள். நாங்கள் அச்சமயம் என்னவிதமான பதில் கூறுவது. இவளல்லவென்பதை மட்டும் கூறினோம். அதற்குள் ஒரு சேவகன்" நேற்றைய முந்தின நாள் இரவு அடையாற்றிலுள்ள வக்கீல் நடராஜமுதலியாரின் புதல்வி காந்தாமணியைச்செல்லப்பா என்பவன் கொலை செய்து விட்டதாக அவனைச் சிறையில் வைத்திருக்கிறார்கள். இச்செய்தி பத்திரிகையிலும் வந்திருக்கிறது. இச்சவத்தின் பெயரும் காந்தாமணி என்றே எழுதியிருப்பதால் நாம் உடனே அடையாற்றுப் போலீசாரை வரவழைத்துச் சவத்தைக் காட்டுவதுடன் அந்த முதலியாரையும் அழைத்துக் காட்டினால் தகவல் தெரிந்துவிடும். முலலையூர் ஜெமீந்தாரின் பங்களா இது தான். இந்த ஜெமீந்தாரின் புதலவா தான் குற்றவாளியாக விருக்கிறார். சவம் அகபபடவிலலை என்றும் கேள்வி. ஆகையால் நாம் தாமதிக்காமல் வேலை நடத்த வேண்டும்" என்றான். உடனே ஒரு சேவகன் சைகிலில் அடையாற்றுக்குப் போனான். மீண்டும் இரண்டாவது முறை உஙகளுக்கு டெலிபோன் செய்தேன். தாங்களும் வநதீர்கள். வாருங்கள் அங்கு சென்று பார்க்கலாம்" என்று நாயுடுவைச் சவமிருந்த அறைக்கு அழைத்துச் சென்றார்.

இச்செய்தியைக்கேட்ட நாயுடு வியப்பே வடிவாய் மாறிப்போய் "ஆ! இதென்ன விசித்திரமான சம்பவமாய் இருக்கின்றதே" என்று கூறியவாறு சவத்தருகில் சென்றார். போலீசார் அங்கு சவததருகி லிருநதார்கள். நாயுடுவைக் கண்டதும் அவர்கள் வநதனம செய்தார்கள். நாயுடுவும் பதில் மரியாதை செய்து பின் சவததை வெகு கூர்மையாயும் வெகு நேரமும் கவனித்துப் பார்ததார். எதுவும் பதில் சொல்லவில்லை. அவருக்கே இன்னதென்று புலப்படாத குழப்பமும், வியப்பும் வந்து மனத்தில் கப்பிக் கொண்டன. அவர் சவத்தின் பெயரையும் மோதிரத்தையும் இன்னும்

மற்ற எல்லாவற்றையும் பார்த்தார்; எதுவும் புலப்படவில்லை. இதற்குள், சைகலில்சென்ற போலீஸ் சேவகனும் இன்னும் அடையாற்று போலீஸாரும் வந்து சேர்ந்தார்கள். வந்தவர்கள் சவத்தையும், அடையாளங்களையும்,பெயர் தைத்ததையும் கண்டுவியந்து கட்டிலடங்கா வெற்றி மகிழ்ச்சியோடு,"ஆகா! இந்தப்படத்தையும் இந்தச் சவத்தையும்பாருங்கள். ஒரேமாதிரியாக இருக்கின்றது. இதுசந்தேகமில்லாமல் அந்தக் காந்தாமணியின் சவந்தான்" என்று கூறிக் கொண்டே யிருக்கையில் காந்தாமணியின் வீட்டுக் குமாஸ்தாவும் வேலையாட்களும் கதறியவாறு ஓடிவந்தார்கள். அவர்கள் அங்குக்கிடக்கும்சவத்தைக் கண்டு புடவை,ரவிக்கை,மோதிரம் முதலியவற்றைப் பார்த்து அலறியடித்துக் கொண்டு, "ஐயோ! எங்க எஜமானியம்மாள் தான் இந்தக் கதியிலிருக்கிறார்கள். அநியாயமே! பாவி சண்டாளன் இந்தக் கதியாக்க வேண்டும் என்று எத்தனைநாள் கறுவிக்கொண்டிருந்தானோ தெரியவில்லையே! அடே கிராதகா! துராத்மா! உன்மனமும் கையும் இந்தக் குழந்தையை இவ்வாறு சின்னபின்னம் செய்ய எவ்வாறு துணிந்ததடா? நாசகாலா! அண்டவந்தவன் போலவந்து உயிரையே கொண்டுபோய்விட்டாயே! கொலைபாதகா! ஐயோ! எங்கம்மாவை இவ்வாறு காணும்படி நாங்கள் என்னபாவம் செய்தோமோ தெரியவில்லையே!" என்று பெரிய சத்தமிட்டுக் கதறினார்கள். இதற்குள் போலீஸார் அவர்களைச் சவத்தினிடமிருந்து விலக்கி விட்டுத் தேறுதல் கூறினார்கள். பிறகு சவத்தை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோவதற்கு ஆயத்தமானார்கள். இதற்குள் காந்தாமணியின் வீட்டு வேலைக்காரனில் ஒருவன் "ஐயா! இந்தச் சவத்தையேனும் எங்க எஜமானர்கள் பார்க்கும்படிக்குச் செய்து பிறகு உங்கள் அதிகாரப் படி செய்யலாகாதா? அவர்கள் இங்கு வருவதற்குச் சம்மதப்படவில்லை. சவத்தை அங்குகொண்டு காண்பிக்கும்படி செய்யலாகாதா?" என்று இறைஞ்சிக் கேட்டான். இதைக் கேட்ட போலீஸார், "அவர்கள் ஆஸ்பத்திரியில் வேண்டுமானால் வந்து பார்க்கட்டும்" என்று கூறினார்கள். இதற்குள் சைதாப்பேட்டை முதலியாருடைய குமாஸ்தா, போலீஸாரை நோக்கி, "ஐயோ! உங்கள் தோரணைப்படியே வழக்கை முடிக்கும் வழியைத் தேடுகின்றீர்களே. இந்தச் சவம் அந்தப் பெண்மணியினுடை

யதுதான் என்று நீங்கள் எவ்வாறு தீர்ப்பு செய்யலாம்? மனிதர்களுக்கு முகத்தில் தானே அடையாளம் தெரியவேண்டும். இதன் முகத்தில் அனேக காயங்களினுல் அடிபட்டு விகாரித்திருப்பதால் அவள்தான் என்று எவ்வாறு தீர்மானிப்பது?" என்றுர்.

போலீசார்:—(நகைத்துக் கொண்டே) இன்னும் இதில் சந்தேகம் வேறு இருக்கின்றதோ? பேஷ்! போலீசாரை முட்டாளாக எண்ணிப் பேசுகின்றீர்களா? நேரே அப்பெண்மணியின் சவத்தைக் கண்ணெதிரில் காணும்போது இதில் மாருட்டமும் உண்டோ?

அதற்குள் ஒரு போலீஸ் சேவகன்—"என்ன ஐயா! நீர் எங்களை அவமதித்துப் பேசுகிறீர்? நான் அன்று செல்லப்பா கொடுத்த கடிதத்தை அடையாற்றிற்கு எடுத்துக்கொண்டு சென்று இந்தப் பெண்மணியினிடம் கொடுத்தேன். அப்போது இந்தப் பெண்மணியை நான் கவனிக்கவில்லை என எண்ணினீரா? முகம் காயத்தினுல் விகாரித்து விட்டதனுலேயே அந்தப் பெண்மணியல்லவென்று கூறமுடியுமா? அவன் அன்று இரவே அவளைக்கொலை செய்து கோணியில் அடைத்துக் கட்டி எவரும் தன்னைச் சந்தேகியா வண்ணம் அவனுடைய சொந்த பங்களாவாகையால் இதனுடைய ரகஸிய அறையைத் தெரிந்து, அதில்கொண்டு வந்து வைத்துவிட்டுப்போய்விட்டான். "இங்கு யார் வந்து பார்க்கப் போகிறுர்கள்; இதை வேறு என்னவாவது செய்துவிடலாம்" என்ற எண்ணம் அவனுக்கு. இது நன்றுகப் புலப்படுகின்றது. இதில் சந்தேகிக்க இடம் யாது?" என்றுன்.

இதைக் கேட்ட நாயுடு குமாஸ்தாவைப் பார்த்து, "அவர்கள் கூறுவது உண்மையாகவே இருக்கலாம். நீர் பேசாதிரும்" என்று போலீசாருக்குஅனுகூலமாகவேகூறிவிட்டார். இதைக்கேட்டபோலீஸாரும் மகிழ்ந்தவராய் அங்குள்ளஅடையாளங்களை யெல்லாம் குறித்துக்கொண்டார்கள். பிறகு அவர்கள் இங்கு காணுமல் போன பெண்மணி யார்? எவ்வாறு காணுமல் போய்விட்டாள்?—முதலிய விவரங்களையும் பத்மாவின் அடையாளங்களையும், புகைப்பட மொன்றையும் வாங்கிக்கொண்டு, முதலியாரின் கடிதத்தையும் எடுத்துக்கொண்டு

இனாம்!

இனாம்!

முற்றிலும் இனாம்!

'C' ரிஜிஸ்டர்!


டைம்பீஸ்

இனாம்.

'C' ரிஜிஸ்டர்!

டைம்பீஸ்

இனாம்.




எங்களின் "தாரா" லீவர் 18-காரட்டு ரோல்டுகோல்டு பாக்கட் சடியாரம் பின்புறம் சித்திரவேலை செய்யப்பட்டதை வாங்குகிறவர்களுக்கு "C" டைம்பீஸ் இனாமாக அனுப்பப்படும். விலை பாக்கட் சடியாரம் 1-க்கு இனாமுடன் ரூ 5. இச்சடியாரத்தில் உள்ள டையலின் பேரில் ஐந்து வருஷம் உத்திரவாதம் என்று அச்சிட்டிருக்கிறது. முந்துங்கள்.

காப்டன் வாச் கம்பெனி, தபாற்பெட்டி நெ 265, மதராஸ்.

---


ஒரு மாதம்

பாதிவிலை! பாதிவிலை!

வரையிலும்

அசல் விலை ரூபாய் 14.

பாதி விலை 7,




22 காரட் ரோல்டு கோல்டு கைக்கெடியாரம் 10 வருஷம் உத்திரவாதம். பார்வைக்கு அழகாயும், இக் கெடியாரங்களில் எம்மாதிரி ஷேப் ஆனபோதிலும் அனுப்பிவைக்கப்படும். பாதி விலை ரூ 7. ஒவ்வொரு கெடியாரமும் ஒரு பட்டு பட்டையுடன் அனுப்பி வைக்கப்படும்.

ஸ்வான் ஹவுஸ்.

தபால் நே, 508, பி, டி மதராஸ்.

# லோகோபகாரி.

முப்பத்திமூன்று ஆண்டுகளாய் நிலவும்.

## வாரப் பத்திரிகை.

பத்திராதிபர்—பரலி-சு. நெல்லையப்ப பிள்ளை.

தமிழர்கள் புத்துயிரும் புது வாழ்வும் பெறுவதற்காகப் பாடுபட்டு வரும் வாரப் பத்திரிகை. உலகத்தில் அந்தந்த வாரத்தில் நடக்கும் செய்திகளெல்லாம் லோகோபகாரியில் சுருக்கமும் விளக்கமுமாக வெளிவரும். சிறந்த பாடல்களும், சித்திரப் படங்களும் அவ்வப்போது வெளிவரும். பாரத தேசம் சகல துறைகளிலும் சுயராஜ்யம் பெற்று, லோகமெல்லாம் க்ஷேமம் அடைய வேண்டுமென்பதே லோகோபகாரியின் நோக்கம். உலகத்தில் அறநெறியும், அன்பு நெறியும் வளர்ந்து இன்பம் நிலவுமாறு லோகோபகாரி நெடுங்காலமாக உழைத்துவருகிறது. இதனைத் தமிழ்மக்கள் ஆதரிக்கவேண்டும்.

வருஷ சந்தா ரூபாய் நாலு. வெளிநாட்டுக்கு ரூபாய் ஆறு.

மாதிரிப் பிரதி இனாம்.

காரியஸ்தர்,

லோகோபகாரி பத்திரிகாலயம்,

கோமளேசுவரன் பேட்டை, சென்னை.


---


## "கிருஷிகன்."

ஓர் மாதாந்த விவசாயப் பத்திரிகை.

பத்திரிகாசிரியர்கள் :—

(1) ராவ்பஹதூர் ஜெ. செல்வரங்க ராஜு
பென்ஷண்ட் விவசாய டெப்டி டைரேக்டர்

(2) J. R. ரங்கராஜு

வருஷ சந்தா தபால் கூலி உள்பட ரூபாய் ஒன்று தான்.

எல்லோரும் சுலபமாய் அறிந்து கொள்ளக்கூடிய எளிய நடையில் கிருஷிகருக்கு அனுகூலமுண்டாகக் கூடிய வழிகளை எடுத்துக் காட்டுவதிலும் கிருஷிகருக்கு ஏற்படும் சந்தேகங்களை நிவர்த்திப்பதிலும் "கிருஷிகனு"க்குச் சமானமான பத்திரிகை கிடையவே கிடையாதென்பது நிச்சயம்.

"கிருஷிகன்" பத்திரிகையானது சுயநலத்தைக் கருதாது விவசாய அபிவிருத்தியையும், அதன் மூலமாய் தேச க்ஷேமத்தையும் கருதி வெளிப்படுவதால் வருஷ சந்தா தபால் கூலி உள்பட ரூ. ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது.

வி. பி. மூலமாய் அனுப்பினால் ரிஜிஸ்ட்ரேஷன் கூலிசேர்த்து ரூ 1-4-0 ஆகும். ஆகையால் உடனே ரூ. ஒன்று மணியார்டர் செய்து தங்கள் பேர்களைப் பதிவு செய்து பத்திரிகை பெற்றுக் கொள்ளுங்கள்.

மானேஜர் "கிருஷிகன்" ஆபீஸ்,
"ஜகந்நாதபாக்" சைதாப்பேட்டை, சென்னை.

நூற்றுக்கணக்கான ஜனங்கள் நிறைந்துள்ள சபையில் நிற்கும் புரோகிதரின் மண்டையில் ஓங்கி ஓர் அறைவிட்டார். இதைக் கண்ட சபையோர்களும் புரோகிதரும் நடுநடுங்கிப்போய் செய்தி இன்னதென்று அறியமாட்டாமல் இமைப்பொழுதில் கலங்கிவிட்டனர். இதற்குள் பெண்ணின் தந்தை உரத்த குரலில் ஆவேசத்தோடு பேசத்தொடங்கி, "ஏ, புத்திகெட்ட புரோகிதரே! உம்முடைய மண்டையில் களிமண்ணையா உருட்டி வைத்திருக்கிறது? நான் 40 வயதில் 7 வயது பெண்ணை விவாகம் செய்துகொண்டேன். அவள் சுமார் முப்பது வயதில் அருமையான ஒரு பெண் குழந்தையை எவ்வளவோ கஷ்டப்பட்டுப் பிரசவித்தாள். அந்தக் குழந்தையை எங்கள் கண்ணைக நாங்கள் வளர்த்து வருகிறோம். எனக்கு சுமார் 67 வயதாய்விட்டது. ஒருகால் நானிறந்துவிட்டால் என்ன செய்வதென்ற பயத்துடன் என் குழந்தைக்கு 4 வயதிலேயே விவாகத்தை முடித்துக் கண்ணாரக் கண்டு களிக்கவேண்டுமென்று ஆவலுடன் 3000 ரூபாய் செலவிட்டுக் கலியாணம் செய்கிறேன். உம்முடைய எழவை எடுக்க; நீர் நாசமாய்ப் போக; என் குழந்தைக்கு சுபமாக மந்திரம் சொல்வதைவிட்டு "ஆயுள் மந்தம்" என்று கூறுகிறீரே. நீர் என்ன ஜோசியரா? என் குழந்தைக்கு ஆயிசுமந்தமோ! அல்பாயுசோ! நீர் கண்டீரோ? ஜாக்கிரதை இனி அப்படிக் கூறினால் உம்மை ஹதஞ் செய்துவிடுவேன். நீர் முன்னால் வெளியில் செல்லும். என் குழந்தைக்கு நீர் அல்பாயிஸ் வரம் கொடுக்கவேண்டாம்" என்று பெரியதோர் பிரசங்கம் செய்தார். அதைக் கேட்ட சபையிலிருப்போ ரனைவரும் அவருடைய மூடத்தனத்தை எண்ணி வியந்து விலாப்புடைக்க நகைத்தார்கள்.

வை. மு. கோ.

---

# அமிர்தாஞ்சனம்

அமிர்தா ஞ்சனம்




சர்வ நோய்களுக்கும்

ஸித்த ஔஷதம்

விலை அணா 10 ரூ. 0-10-0

இருபத்தைந்து வருஷமாக
லக்ஷக்கணக்காக விற்று வருகிறது.
அபூர்வ மூலிகைகளினால் தயார் செய்யப்பட்டு
அழகாய் பாக்கிங் செய்து உபயோகத்துக்குத் தயாராய்

## எல்லா நோவுக்கும்

ஒரு கைகண்ட ஔஷதம் அமிர்தாஞ்சனமே
தலை வலி, முதுகு வலி, கீல் பிடிப்பு முதலிய
எல்லா நோய்களையும் நொடிப்பொழுதில்
தீர்க்கும்.

## உடனே முந்துங்கள்

மோஹினி தைலம்,
பாட்டில் 1-க்கு 0—12—0

படைமருந்து
டப்பி 1-க்கு 0—6—0

பல்பொடி
டப்பி 1-க்கு 0—2—0

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்.

**அமிர்தாஞ்சன் டிபோ,**
**7. தம்புச் செட்டி வீதி, சென்னை**


Edited and Published by V. M. Parthasarathy Iyengar,
PRINTED AT THE "NOBLE PRESS," TRIPLICANE, MADRAS, S.E.